DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

28ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிர்க்கும் கதிர் வேகம் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1498 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 20, 2024

# கனடா 'உதயன்' பத்திரிகையின் தொடர்ச்சியான ஊடகப் பணிகளுக்கு ஒரே மேடையில் பல துறைகளைச் சார்ந்தவர்கள் புகழாரம் சூட்டினர்






கனடாவின் ஸ்காபுறோ நகரிலிருந்து தொடர்ச்சியாக கடந்த 28 வருடங்களாக வெளிவரும் "மக்கள் பத்திரிகை"யான கனடா உதயன் தனது 28வது ஆண்டு விழாவை பல்சுவைக் கலை நிகழ்ச்சிகளோடு கடந்த சனிக்கிழமையன்று 14ம் திகதி "கென்னடி கொன்வென்சன் சென்றர்" மண்டபத்தில் நடத்தியது.

உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தலைமையில் இயங்கிய விழாக்குழுவில் "தேசம்" மாத இதழின் வெளியீட்டாளர் சங்கர் சிவநாதன் மற்றும் "லயன்" மரியாம்பிள்ளை மரியராஜா அத்துடன் சமூக சேவகர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் செயற்பட்டனர். கனடாவில் உள்ள பல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நண்பர்கள் பலரது ஆதரவும் சில கலை சார்ந்த அமைப்புக்களும் உதயன் பத்திரிகையோடு தோளோடு தோள்நின்று இந்த விழாவை அழகிய முறையில் நடத்த உதவினர். கனடாவில் உள்ள பல ஊடக நண்பர்கள் உதயன் பல்சுவைக் கலைவிழா பற்றிய செய்திகளையும் அறிவுப்புக்களையும் சிறப்பாகச் செய்திருந்தனர் என்றால் அது மிகையாகாது.

உதயன் பல்சுவைக் கலை விழாவிற்கு சிறப்புப் பேச்சாளராக தமிழகத்திலிருந்து "தமிழா! தமிழா! தொலைக்காட்சி புகழ் கரு பழனியப்பன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

# எனக்கும் பிரதமருக்கும் சில நாட்களாக இருந்த முரண்பாடுகளே எனது இராஜினாமாவிற்கான காரணமாகும்

## கனடாவின் சிரிவி தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் கனடாவின் முன்னாள் நிதி அமைச்சர் கிறிஸ்ரீனா ப்ரிலாண்ட் தெரிவிப்பு



"எனக்கும் பிரதமருக்கும் சில நாட்களாக இருந்த முரண்பாடுகளே எனது இராஜினாமாவிற்கான காரணமாகும். அத்துடன் அவர் என்னை எனது பதவிகளிலிருந்து விலகிக் கொள்ளுமாறு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்தார். முக்கியமாக அவரது சில யோசனைகளுக்கு நான் சம்மதம் தெரிவிக்கவில்லை. அவை முட்டாள்த்தனமாக யோசனைகளாக எனக்குத் தோன்றின."

இவ்வாறு கனடாவின் சிரிவி தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கனடாவின் முன்னாள் நிதி அமைச்சரும் துணைப் பிரதமருமான கிறிஸ்ரீனா ப்ரிலாண்ட் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## நத்தார்ப் பண்டிகை வாழ்த்துக்கள்

எமது வாசகர்கள். விளம்பரதாரர்கள். எழுத்தாளர்கள். இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் எமக்காகப் பணியாற்றும் செய்தியாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் புனித நத்தார்ப் பண்டிகை வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
கனடா உதயன் நிறுவனம் மற்றும் ஆசிரிய பீடம்

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


Merry Christmas
and Happy Holidays
from my family to yours
PATRICE BARNES
MPP for Ajax
Ontario
230 Westney Rd South, Suite 502, Ajax, ON, L1S 7J5
905-427-2060 | Patrice.Barnes@pc.ola.org | patricebarnesmpp.ca

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




# கனடாவின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றது?

கனடா என்னும் தேசம் உலகத்தவர்களுக்கு வாழ்வதற்கு ஒரு சிறந்த இடமாகக் கருத்தப்பட்டது. அதன் காரணமாகவே உலகின் நான்கு திசைகளிலிருந்தும் அகதிகளாகவும் குடிவரவாளர்களாகவும் மக்கள் குடியேறத் தொடங்கினார்கள். கனடாவின் பலகலாச்சாரக் கொள்கைகளும் மேலும் பல வழிகளாலும் தாக்கங்களுக்கு உள்ளாகியும் பாதிக்கப்பட்டும் கனடாவிற்குள் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அகதிக் கோரிக்கையாளரையும் இன்முகம் காட்டி வரவேற்று வாழ்வதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் அளித்து அகதிகள் நாட்டின் பிரஜைகளாகவும் ஆவதற்கு வழி செய்கின்றது இந்த தேசத்தின் உன்னதமான அரசியல் சாசனம்.

ஆனால் அண்மைக்காலமாக கனடிய என்னும் அழகிய தேசம் திட்டமிடப்படாத குடிவரவுக் கொள்கைகளினால் அகதிகள் என்ற பெயரிலும் குடிவரவாளர் என்ற அங்கீகாரத்தோடும் இங்கு வருபவர்களில் குற்றவாளிகளும் உள்ளார்களா என்று சந்தேகிக்கப்படும் நபர்களும் உள்ளார்கள் என்பது புலனாகியுள்ளுத.

அண்மைக்காலமாக கனடாவில் இடம்பெற்று வரும் கடுமையான குற்றச் செயல்களாக கருதப்படும் வாகனத் திருட்டு- நகைக்கடைகளில் பகல் நேரங்களில் புகுந்து கொள்ளையிட்டுச் செய்வது- மற்றும் அனுமதிக்கப்பெற்ற போதைப் பொருள் பாவனையால் வீதிகளுக்கு வந்து பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் போதைப் பொருள் பாவனையாளர்களின் சட்டத்தை மீறும் செயற்பாடுகள் என இந்த அழகிய தேசத்தின் ஊடகங்களில் தினமும் கொலைகளும் கொள்ளைகளும் சட்ட விரோதச் செயல்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இந்த நேரத்தில் கனடிய அரசியலிலும் ஸ்தீர நிலை அற்றுப் போய் வரவு செலவுத்திட்டத்தை தயாரித்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டிய நிதி அமைச்சரின் இராஜினாமாவும் இடம் பெற்றுள்ளமை தேசத்தின் மக்களையும் அரசியல் தளத்தையும் அதிரச் செய்துள்ளது.

அடுத்து வரும் வாரங்களோ அன்றி வாரங்களோ எவ்வாறு நகரப் போகின்றன என்பதும் அனைத்துக் கனேடியர்கள் மத்தியிலும் பல கேள்விகளை எழுப்பும் நாட்களாக மாறலாம்.!

## வீடு வாடகைக்கு உண்டு

**ஸ்காபுறோவில்** Sheppard Avenue & Morningside **சந்திப்புக்கு அருகில் உள்ள வீடும் பேஸ்மன்ட்** (Basement) **உட்பட வாடகைக்கு உண்டு. பேஸ்மன்ட் தனியாகவும் வாடகைக்கு விடப்படும். தமிழர் கடைகள் மற்றும் மல்வேர்ன் நூலகம் ஆகியன மிக அருகில் உண்டு. மேலதிக விபரங்களுக்கு:- 416 283 8275 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.**

# எனக்கும் பிரதமருக்கும் சில நாட்களாக இருந்த...

(முன் பக்கத் தொடர்ச்சி)

சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த தொலைகாட்சிப் பேட்டியில் கிறிஸ்ரீனா ப்ரிலாண்ட் வெளிப்படையாக பல கருத்துக்களைத் தெரிவித்தார்.

அமைச்சரவையில் இருந்து அவர் வெளியேறும் செய்தியானது கனடாவின் மத்திய அரசாங்கத்தை கொந்தளிப்பான நிலைக்குத் தள்ளியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. கனடாவின் முன்னாள் துணைப் பிரதமரும் நிதி அமைச்சருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தொடர்ந்து மேற்படி பேட்டியில் தெரிவிக்கையில் தனக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட பிளவுகளை மேற்கோள் காட்டி, ட்ரூடோ தன்னை ராஜினாமாச் செய்யும்படிெ நிர்ப்பந்தித்தார் என்றும் இறுதியில் இந்த நடவடிக்கை எமக்கிடையே ஒரு பெரிய கருத்து வேறுபாட்டைத் தீர்மானிக்கும் காரணியாக மாறியது என்றும் அவர் தெரிவித்தார். கடந்த 16ம் திகதி திங்களன்று கனடியப் பிர-தமர் ட்ரூடோவுக்கு எழுதிய கடிதத்தில் தனது ராஜினாமாவை அவர் அறிவித்தார், அதில் இருவரும் “கனடாவுக்கான சிறந்த பாதையைப் பற்றி முரண்படுகின்றோம்“ என்றும், ஆபத்தான அதிக செலவு செய்வதன் மூலம் “கடுமையான சவால்களை“ தான் சுட்டிக்காட்டியதாகவும் மேலும் அண்மையில் அறிவிக்கப்பெற்ற ஜிஎஸ்ரி இரத்து பற்றிய அறிவிப்பு ஒரு “புத்தியில்லாத அரசியல் வித்தை“ என்று தான் பிரதமரிடம் தெரிவித்ததாகவும் ஆனால் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தனது கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கவலையுடன் தெரிவித்தார்

தனது இராஜினாமா பற்றிய முடிவு தன்னால் எடுக்கப்படவில்லை என்றும் தான் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் கடந்த வாரம் பிரதமர் ட்ரூடோ தனக்கு அறிவித்த பின்னர், அவர் தனது அரசாங்கத்தின் உயர்மட்ட பொருளாதார ஆலோசகராக தொடர்ந்து இருக்க விரும்பவில்லை என்றும் கிறிஸ்ரீனா ஃப்ரீலேண்ட் கூறியுள்ளார். சி.டி.வி.தொலைக்காட்சியின் வாஸி கபெலோஸ் என்னும் நிகழ்ச்சித் தயாரபாளருக்கு பேட்டியை வழங்கிய கிறிஸ்டியா ஃப்ரீலாண்டின் பின்வரும் விடயங்களையும் மனந்திறந்து பகிர்ந்து கொண்டார.

நிகழ்ச்சித் தயாரிப்பாளர் வாசி கபெலோஸ்: தனது முதலாவது கேள்வியாக கிறிஸ்ரீனா ப்ரிலாண்டிடம் சமர்ப்பித்த அதில் “முழு தேசமும மக்களும் கனடியப் பிரதமருக்கு நீங்கள் அனுப்பிய உங்கள் ராஜினாமா கடிதத்தைப் படித்துள்ளார்கள், இப்போது இந்த பேட்டியில் உங்கள் கதையின் பக்கத்தைச் சொல்லப்போவதாக அறிவித்துள்ளீர்கள். இந்த இராஜினாமா விவகாரம் திடீரென நடந்தது என்று சொல்ல முடியுமா?“ என்ற கேள்வியை முன்வைத்தார்

அதற்கு பதிலளித்த கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட்:, கடந்த வாரம் ராஜினாமா செய்ய பிர-தமர் என்னிடம் கேட்பதற்கு முன்பே இதுதான் நிகழப்போகின்றது என்பதை உணர்ந்து கொண்டேன்.. நாங்கள் இருவரும் இப்போது சில காலமாக முரண்பட்டுள்ளோம் .. நிதி சிக்கன நடவடிக்கை மற்றும் ஓரளவு கட்டுப்பாடுகள் குறித்து நான் பிரதமர் அவர்களிடம் மன்றாட்டமாக கேட்டுக்கொண்டேன். கெஞ்சினேன். ஆனால் அவர் அதற்கு உடன்படவில்லை“ என்றார்

வாசி கபெலோஸ்: “ஆகவே, அனுப்பப்பட வேண்டிய 250 டாலர்கள் பெறுமதியான காசோலைகள், ஜிஎஸ்டி விடுவிப்பு, இவை அனைத்தும் ட்ரூடோவால் உத்தரவிடப்பட்டன, அவைகளுக்கும் உங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்களா?“ என்ற அடுத்த கேள்வியை வாசி கபெலோஸ்: முன்வைத்தார்.

அதற்கு பதிலளித்த கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட்: “சரியாக, உங்களுக்குத் தெரியும், பொருளாதாரத்தையும் சரிசெய்யும் அதிகப்படியான திட்டத்திற்கு எனக்கு ஒரு தீர்வு கூட இருந்தது, ஆனால் ஜஸ்டின் அதற்கு சம்மதிக்கவே இல்லை“ என்றார் கிறிஸ்டினா ப்ரிலாண்ட்.




Wishing you a very
Merry Christmas
And happy new year
உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும்
ஆரோக்கியமானதும் வளமானதுமான கிறிஸ்துமஸ் மற்றும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

# யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளம் யுவதி இரணைமடுச்சந்தியில் வைத்து கடத்தல்! தற்போது விடுவிக்கப்பட்டுள்ள அவர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, இரணைமடுச் சந்தி கனகாம்பிகைக்குளம் வீதியில் வைத்து 26 வயதுடைய இளம் பெண்ணொவர் 16ம் திகதி அன்றையதினம் பி.ப 6 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புன்னாக்லைக்கட்டுவான் பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி, கிளிநொச்சியில் உள்ள அழகுக்கலை நிலையம் ஒன்றில் பயிற்சி பெற்று வரும் நிலையில், கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள வாடகை வீடு ஒன்றில் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் வழமை போன்று குறித்த யுவதி கற்கைநெறியை முடித்துவிட்டு, தான் தங்கியிருக்கும் இடத்துக்கு திரும்புகையில் வான் ஒன்றில் சென்ற குழுவினர் அந்தப் பெண்ணை கடத்திச் சென்றுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த யுவதியின் கைப்பை மற்றும் தொலைபேசி ஆகியன கண்டெடுக்கப்பட்ட நிலையில் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சரத் சமரவிக்ரம தலைமையிலான பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த யுவதியை கடத்திச் சென்றவர் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவர் யுவதியின் முன்னாள் காதலன் என்றும் தெரியவருகிறது. அவர் யுவதியை, யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு கடத்திச் சென்றுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட யுவதி திருமணத்துக்கு மறுப்பு தெரிவித்தவேளை, யுவதியின் நண்பியை அழைத்த குறித்த குழு அந்த யுவதியை நண்பியின் கையில் பாரப்படுத்திவிட்டு தப்பிச் சென்றது. இந்நிலையில் அந்த நண்பி குறித்த யுவதியை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். மருத்து பரிசோதனைக்காக அந்த யுவதி வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெற்றோருக்கு நிதி அனுப்புவது குற்றமா — ஜனாதிபதி சட்டத்தரணி கேவி தவராசா மன்றில் வாதம்!




பிரித்தானிய பிரஜையான சங்கர் LTTE மீள் உருவாக்கத்திற்காக நிதி திரட்டி இலங்கைக்கு அனுப்பியதாக 2012 ஆம் ஆண்டு குற்றப்புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதுடன் அவருக்கெதிராக பயணத்தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

பிரித்தானிய பிரஜையான விஜயசுந்தரம் சங்கர் தனது தாயாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்காக கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இலங்கை வருகை தந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்ற புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு 17-12-2024 அன்று கொழும்பு நீதவான் மன்றில் எடுத்தும் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர் சங்கர் சார்பில் ஆஜராகிய சரார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா தனது வாதத்தில் இந்த சந்தேக நபரை கைது செய்தமை சட்டரீதியற்ற கைது என்றும் 2009 ஆண்டு யுத்தம் மௌனிக்கபட்ட பின்னர் பல நூற்றுக்கணக்கான அப்பாவிகள் கைது செய்யப்பட்ட பொழுது இந்த சந்தேக நபரும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு இவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமந்த முடியாத நிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு பிரித்தானியாவுக்கு பயணமாகிய பின்னர் பிரித்தானிய பிரஜாவுரிமையும் பெற்றுக்கொண்டார்.

பொலீசார் 2012 இல் சந்தேக நபர் சங்கருக்கு எதிராக நிதி சேகரித்ததாக நீதி மன்றில் அறிக்கையை தாக்கல் செய்து விசாரணை செய்த போதிலும் 2024 ஆம் ஆண்டு கைது செயப்படும்வரை இவருக்கெதிராக பொலிஸ் விசாரணையில் நீதிமன்றில் எவ்வித சான்றுகளும் முன்வைக்கப்படவில்லை என்பதோடு சந்தேக நபர் எந்த குற்றதை புரிந்தார் என்பதை நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கைகளில் பொலிசார் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

2010 ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு கைது செய்யப்படும் வரை சந்தேக நபர் இலங்கைக்கு எந்த விஜயமும் மேற்கொண்டிருக்கவில்லை என்பதை நீதி மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன்.

மேலும் தனது வாதத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா இவ்வாறான சட்டரீதியற்ற கைதுகளினால் புலப்பெயர் தமிழர்களின் வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைவதுடன் சுற்றுலாத்துறையிலும் பாரிய பாதிப்புகள் ஏட்படுவதுடன் இது இலங்கை பொருளாதாரத்தில் வீழ்ச்சியையும் ஏட்படுத்தும், என்பதனையும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

கடந்த 06 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் பிரித்தானிய பிரஜையினால் நிதி அனுப்பட்ட தாக கைது செய்யப்பட்டார் ஆனால் விசாரணையில் தனது பெற்றோருக்கே நிதி அனுப்பியதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது பெற்றோருக்கு நிதி அனுப்புவது குற்றமா?

என்ற வாதத்தையும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா நீதிமன்றில் முன்வைத்ததை அடுத்து கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி சந்தேக நபரை விடுதலை செய்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சாவகச்சேரி நகர வர்த்தகர்களும், பொதுமக்களும் சாவகச்சேரி நகரசபை முன்றலில் போராட்டம்!

**பு. கஜிந்தன்**



யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நகர வர்த்தகர்களும், பொதுமக்களும் சாவகச்சேரி நகரசபை முன்றலில் செவ்வாய்க்கிழமை 17ம் திகதியன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி நகர சபையால் அண்மையில் கட்டப்பட்ட புதிய கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்கமாக கேள்வி கோரப்பட்டுள்ளது.

கடைகளை கட்ட ஆரம்பிக்கும்போது 2000 ஆம் ஆண்டு யுத்தத்தில் கடைகள் அழிவடைந்த வர்த்தகர்களுக்கு புதிய கடைத் தொகுதியில் முன்னுரிமை வழங்கப்படும் என கடைகள் வழங்கப்படும் என நகர சபையால் உத்தரவாதமளிக் கப்பட்டிருந்தது.



இந்நிலையில், குறித்த வாக்குறுதியை மீறி கேள்வி கோரப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விண்ணப்பதாரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்க வேண்டும் என்ற நிபந்தினையை உள்ளடக்க வேண்டும் எனக்கோரியுமே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது போராட்டக்காரர்கள் நகரசபையின் பிரதான நுழைவாயிலை பூட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் பூட்டை உடைத்து அகற்றியதோடு போராட்டகாரர்களை கலைக்க முற்பட்டனர். இதனால் நுழைவாயிலில் அமர்ந்தவாறு அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இத்தருணத்தில் நகரசபை வாகனங்களுக்கு பொறுப்பான அதிகாரி கழிவகற்றும் உழவியந்திரத்தால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மோத முயற்சித்ததோடு அதை வீடியோ எடுத்த ஊடகவியலாளரையும் கடுமையாக அச்சுறுத்தினார். இதனால் அங்கு கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேவேளை, குறித்த கேள்வி கோரலை இரு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் பேருந்தில் பயணித்த முதியவர் வாயில் இருந்து நுரை வெளிவந்தது உயிரிழப்பு!

16ம் திகதி அன்றையதினம் திங்கட்கிழமை தனியார் பேருந்தில் சுழிபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பயணி ஒருவர் வாயிலிருந்து நுரை வெளிவந்த நிலையில் திடீரென உயிரிழந்துள்ளார். சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சிவசுப்பிரமணியம் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் அன்று காலை 10.30 மணி அளவில் 782 வழித்தட பேருந்தில், சுழிபுரத்தில் இருந்து பயணத்தை மேற்கொண்டார். இதன்போது அவருக்கு இடைவழியில் வாயில் இருந்து நுரை வெளிவந்தது. பின்னர் தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மீனவர்கள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்படுவதாக வடமாகாண மீனவ பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு!


மீனவர்கள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்படுவதாக வடமாகாண மீனவ பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் 17ம் திகதி செவ்வாய்கிழமையன்று வல்வெட்டித்துறையில் உள்ள தனது இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிதாக பொறுப்பேற்ற கடற்றொழில் அமைச்சர் மீனவர் பிரச்சினையை வெறுமனே பார்வையிட்டுச் செல்வதாகவும், தெரிவித்ததுடன் இந்தியா சென்ற ஜனாதிபதி அனுர குமரா திசநாயக்கா மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பில் மீனவ பிரிதிநிதிகளுடன் பேசி தமது பிரச்சினைகளை அறிந்துகொண்டு செல்லவில்லை என்றும் தெரிவித்தார்.

# 5 கோடி செலவு செய்த படகிற்கு நங்கூரம் இணைக்கப்படாமையால் சேவை பாதிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News




**- ந.லோகதயாளன்**

பல கோடி செலவு செய்த நெடுந்தாரகை நங்கூரம் இன்றிச் செயல்பட முடியாது நிறுத்தி வைத்திருக்கும் அவலம் காணப்படுவதாக நெடுந்தீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கடல் கடந்த தீவுகளிற்கான போக்கு வரத்திற்காக அரசின் 4 படகுகள் உள்ளபோதிலும் தற்போது ஒரு படகு மட்டுமே இயங்குகின்றது. இதில் இறுதியாக இந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் 5 கோடியே 14 லட்சத்து 81 ஆயிரத்து 80 ரூபா செலவிடப்பட்டு நெடுந்தாரகை திருத்தம் செய்யப்பட்டது.

இவ்வாறு படகுகள் பழுதடைந்தும் சேவையில் ஈடுபடாதமை தொடர்பிலும் படகுகளை நிர்வகிக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வினாவியபோது, எழுதாரகை நீண்ட நாள்கலாக பழுதடைந்துள்ளது. ஆனால் வடதாரகை அண்மையிலேயே பழுது ஏற்பட்டது. அதன் திருத்தத்திற்கு சில உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். கிடைத்தவுடன் சீர் செய்யப்படும்.

நெடுந்தாரகையினைப் பொறுத்தமட்டில் கடந்த மாதம் சில சேவையில் ஈடுபட்ட சமயம் அதன் நங்கூரம் கடலில் வீழ்ந்து காணாமல் போனதனால் அப் படகும் சேவையில் ஈடுபட முடியவில்லை எனப் பதிலளித்தனர்.

நங்கூரம் காணாமல் போனமை தொடர்பில் படகை இயக்கும் கடற்படையினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இப் படகுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றபோதும் அதனை இயக்குவது கடற்படையினர்தான். கடந்த வாரம் சேவையில் ஈடுபட்ட சமயம் நெடுந்தீவை அண்டிய பகுதியில் நெடுந்தாரகையின் நங்கூரம் கடலில் தவறி வீழ்ந்து விட்டது. வீழ்ந்த நங்கூரத்தை மீட்பதற்காக கடற்படையினரின் சுழியோடிகள் தேடுதலில் ஈடுபட்டபோதும் கண்டு பிடிக்க முடியவில்லை எனப்பதிலளித்தனர்.

# யாழ்ப்பாணத்தில் திடீர் சுகவீனத்தால் உடல் நலம் குன்றிய குடும்பப் பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் திடீர் சுகவீனத்தால் உடல் நலம் குன்றிய குடும்பப் பெண்ணொருவர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் (15) உயிரிழந்துள்ளார். மாவைகலட்டி, தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த செல்வரூபன் அருள்வாணி (வயது 44) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்ணுக்கும் அவரது குழந்தைக்கும் உடல் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் ஞாயிற்றுக்கிழமை (15) சிகிச்சைக்காக அளவெட்டி வைத்தியசாலைக்கு சென்று மருந்து எடுத்துக்கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

வீடு சென்ற பெண்ணுக்கு மீண்டும் உடல் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் மயக்கமுற்றுள்ளார். அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா சட்டத்தரணி கௌசல்யா ஆகியோரை பிணையில் செல்ல யாழ்ப்பாணம் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது



நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவும், கௌசல்யாவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள், கடந்த 09.12.2024 அன்று அத்துமீறி உள் நுழைந்த வழக்கு 17ம் திகதி செவ்வாய் அன்றையதினம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா சட்டத்தரணி கௌசல்யா ஆகிய இருவரையும் பிணையில் செல்ல யாழ்ப்பாணம் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த வழக்கு தொடர்பான விசாரணை அன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதோ நீதிமன்றம் பிணை வழங்கியது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தியால் வழக்கு தாக்கு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பதவிகளை பயன்படுத்தி மக்களுக்கு சரியான சேவைகளை செய்ய வேண்டும் - வடக்கு ஆளுநர் தெரிவிப்பு!

பு. கஜிந்தன்

பதவிகள் சேவை செய்வதற்காக வழங்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி மக்களுக்கு சரியான சேவைகளை வழங்க வேண்டும். இல்லாவிடின் அந்தப் பதவியில் இருப்பதில் அர்த்தமில்லை. இவ்வாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலையின் ஏழூர் மண்டபத்தில் 14ம் திகதி அன்று சனிக்கிழமை காலை பாடசாலை அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினாராகப் பங்கேற்ற வடக்கு மாகாண ஆளுநர், சாதனை படைத்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசில்களை வழங்கினார்.

தொடர்ந்து தனது பிரதம விருந்தினர் உரையில், நாங்கள் கல்வி கற்ற காலத்துக்கும் தற்போதைய காலத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கின்றது.

அன்று எங்களின் பாடசாலை அதிபர்தான் மேலதிக நேர வகுப்புக்களை எடுத்தார். அவர்களைப்போன்ற ஆசிரியர்கள்தான் இன்றும் எங்களுக்கு முன்னுதாரணமான “கதாநாயகர்களாக” இருக்கின்றார்கள். அன்றைய காலத்தில் நாம் தனியார் கல்வி நிலையங்களுக்கு கூட செல்வதில்லை. அதற்கான தேவைப்பாடு ஏற்படவில்லை. கல்வியால்தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். கிராமத்தின் அபிவிருத்தியோ, எதுவாகினும் கல்வியால் அந்த மாற்றங்களை உருவாக்க முடியும்.

அதேநேரம் கல்வியில் எவ்வளவு உயர்ந்து விளங்கினாலும் நாங்கள் பண்புள்ளவர்களாக இல்லாவிட்டால் எம்மை யாரும் மதிக்க மாட்டார்கள். உயர்பதவியிலிருந்தாலும் பண்பு இல்லாவிட்டால் யாரும் எம்மை மதிக்க மாட்டார்கள். பதவி வரும் போது பணிவு வரவேண்டும்.







இன்றைய மாணவ சமுதாயத்துக்கு பணிவு, இரக்கம், அன்பு என்பவற்றை ஆசிரியர்கள் கூடுதலாக போதித்து அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றவேண்டும். ஆசிரியர்கள் அன்றைய காலத்தில் எமக்கு அடித்தால் நாம் வீட்டில் சென்று சொல்வதற்குப் பயப்படுவோம். ஏனென்றால் வீட்டிலும் மீண்டும் அடி விழும். ஆனால் இன்று அது தலைகீழாகிவிட்டது. ஆசிரியர்கள் மாணவர்களை தண்டிப்பது என்பது அவர்களை எதிரியாகக் கருதி அல்ல. அவர்களின் வளர்ச்சிக்காகவே தண்டிக்கின்றனர்.

இன்று தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பதற்கே எல்லோரும் தயங்குகின்றனர். அந்தளவு தூரத்துக்கு பயம். நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்கிப்போகின்றனர். அதேபோல, வீதிகளில் குப்பை போடுகின்றனர். 1970 ஆம் 1980 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தான் மிகத் தூய நகரம். இன்று மிக குப்பையான நகரமாக மாறியிருக்கின்றது.

மோட்டார் சைக்கிள்களில், கார்களில் வந்து குப்பைகளை கொட்டிவிட்டு செல்கின்றனர். வீதியிலும், வாய்க்காலிலும் குப்பை போடுவது நாங்கள்தான். வீதிகளையும், வாய்க்கால்களையும் ஆக்கிரமித்து கட்டடங்கள் கட்டுவதும் நாங்கள்தான். பின்னர் வெள்ளம் வந்துவிட்டது என்று கத்துவதும் நாங்கள்தான்.

எங்களின் மனநிலை மாறவேண்டும். இளமையில் - இந்த மாணவர்களிடத்தில் சரியான பழக்க வழக்கங்களை - விழுமியங்களை ஆசிரியர்கள் விதைக்கவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். நாம் மற்றவருக்கு உதவவேண்டும். அப்படிச் செய்தால் எமக்கு பல மடங்கு திருப்பிக்கிடைக்கும்.

இந்தப் பழக்கங்களை மாணவர்களிடத்தில் வளர்த்தெடுக்க வேண்டும். எதிர்காலச் சிற்பிகளான மாணவர்கள் சமூகத்தில் கல்வியறிவுடன் சிறந்த ஒழுக்கத்துடன் வளரவேண்டும். ஆசிரியர்கள் வழிகாட்டவேண்டும், என்றார் ஆளுநர்.

# ஜெனிவா சமவாயங்களின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் கலந்துரையாடல்!



ஜெனிவா சமவாயங்களின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுவிஸர்லாந்து தூதரகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த கலந்துரையாடல் நிகழ்வும், கண்காட்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 16ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் கண்காட்சியை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸர்லாந்தின் பிரதித்தூதுவர் ஒலிவர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தூதுக்குழுத் தலைவர் சப்பாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா, சட்டத்தரணியும் பேராசிரியருமான வி.ரி.தமிழ்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சமஷ்டியை நிலைநாட்டும்படி இந்தியப் பிரதமர் மோடியிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தல்

இலங்கையின் மூத்த தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர், தமிழர்களின் அபிலாஷையை நிறைவேறும் வகையில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்பை உறுதி செய்யும்படி, இந்தியா இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரி கடிதம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க இந்தியாவிற்கு பயணத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமர் மோடிக்கு முகவரியிடப்பட்டு எழுதப்பட்டுள்ள அந்த கடிதத்தை அவர் தனது சமூக வலைதளத்தில் (எக்ஸ்) வெளியிட்டுள்ளார். "இலங்கை அரசியல் யாப்பில் 13ஆவது சட்டத் திருத்தம் கொண்டுவந்து 36 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையிலும், அது அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தைப் பார்க்கும் போது இப்போது நிலைமை மோசமாக உள்ளது" என அந்த கடித்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்கள், தெற்கிலுள்ள சிங்களவர்களுடன் அதிகாரங்களை பகிர்ந்துகொள்ளும் வகையில் 1987ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜெ.ஆர். ஜயவர்தன மற்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இடையே கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் தோல்வியடைந்தது என்பதே வரலாறு. அந்த உடன்படிக்கையின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்த இலங்கை அரசியல் யாப்பில் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த உடன்படிக்கையின் அடிப்படையில், இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தினர் இலங்கை வந்தடைந்தனர். நாட்டிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்தி, அமைதியை நிலைநாட்ட வந்த இந்தியப் படைகள், அதற்கு மாறாக தமிழர்களுடன் சண்டையிடும் ஒரு இராணுவமாக மாறி, பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு, எந்த தமிழர்களை பாதுகாக்க வந்தார்களோ, அவர்களின் வெறுப்பை சம்பாதித்தன.

இலங்கையில் 1987-89 காலப்பகுதியில் இந்தியா முன்னெடுத்த அமைதி காக்கு படை நடவடிக்கையே, இதுவரை இந்திய வெளிவிவகார கொள்கையில் ஏற்பட்ட மிகப்பெரும் தோல்வியாக விமர்சிக்கப்படுகிறது.

"இலங்கையில் அமைதியை ஏற்படுத்தவே" உடன்படிக்கை என கூறப்பட்டு தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும், விடுதலைப் புலிகளை பலவந்தப்படுத்தியும் கைச்சாத்திட வைக்கப்பட்ட அந்த ஒப்பந்தம் உண்மையில் நாட்டில் அமைதியை கொண்டுவரவில்லை.

இவ்வாறான பின்னணியில் அனுர குமார திஸநாயக்க மூன்று நாள் விஜயமாக டிசம்பர் 15 அன்று புதுடில்லி சென்றார்.

தமது அதிகாரபூர்வ விஜயத்தின் போது, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை சம்பிரதாய ரீதியாக சந்தித்த பிறகு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது அமைச்சரவை சகாக்களை சந்தித்து உரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

"இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுதலையடைந்த பின்னர் சந்தேகத்திற்கு இடமின்றி, மிகவும் முக்கியமான காலகட்டத்தில் இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு பயணமாகிறார்" என கஜேந்திரகுமார் பொன்னம்பல் தனது கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து இன மக்களும் எப்படி இணைந்து வாழ்வது என்பது தொடர்பில் இலங்கை புதிதாக சிந்திக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர், நாடு விடுதலையடைந்த பின்னர் ஏற்பட்ட இன மோதலுக்கு பெரும்பான்மையின கொள்கையே காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

"கடந்த 75 ஆண்டுகள்காக கொள்கைகள் ஒரே மாதிரியாகத்தான் இருந்துள்ளன. மேலும் நாட்டில் இடம்பெற்ற இன மோதலே நாட்டை இன்று இந்தளவிற்கு கொண்டு நிறுத்தியுள்ளது. நாடு பொருளாதார ரீதியில் மட்டுமின்றி, அரசியல் ரீதியாகவும் வங்குரோத்து நிலையில் உள்ளது".

இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள வெளிப்படையான கடிதத்தில், நாட்டின் இனப்பிரச்சனைக்கான அடிப்படை காரணத்தைச் சுட்டிக்காட்டியதோடு, அது களையப்படாவிட்டால், அரசியல் தீர்வு என்பது சாத்தியமாகாது என்று குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டின் தொடரும் இன மோதலுக்கு அடிப்படை காரணங்களில் ஒன்று ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பு. நாட்டில் 13ஆவது சட்டத்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பு இருக்கும்வரை, ஆக்கபூர்வமான சுய உரிமை மற்றும் சுயாட்சியை அடைய முடியாது என்ற காரணத்தினால் அதை தமிழர்கள் நிராகரித்திருந்தனர்".

13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதில் இந்தியா தோல்வியடைந்துவிட்டது என்பதை மென்மையாக தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள அவர், அந்த பகிர்வை இலங்கை நீதிமன்றங்களும் தடுத்து நிறுத்தியுள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

"இந்த நாட்டின் உயர்மட்ட நீதிமன்றங்களில் இருந்து 30க்கும் மேற்பட்ட தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த தீர்ப்புகளில், நாட்டில் ஒற்றையாட்சி நிலவும்வரை, அனைத்து அதிகாரங்களும் கொழும்பிலேயே குவிந்திருக்கும் என்று கூறி அதிகாரப் பகிர்வுக்கு எதிராக திர்ப்புகளை அளித்துள்ளன.

தமிழ் தேசியப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைபடுத்தப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ் தேசிய பிரச்சனைக்கான தீர்ப்பு காணப்பட வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து கோரி வருகிறது. ஆனால் அந்த 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள பல அம்சங்களை நடைமுறைபடுத்தப்பட வேண்டும் என்று நாட்டின் உயர்மட்ட நீதிமன்றங்களை அணுகிய போது, மேற்கூறிய முடிவுகளே வந்துள்ளன".



இந்திய - இலங்கை உடன்படிக்கையின் மூலம் அறிமுகமான 13ஆவது திருத்தச்சட்டம் அதன் நோக்கத்தை எட்டுவதில் தோல்வியடைந்துவிட்டது என்று இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதேவேளை அதிகாரப் பகிர்வு முழுமையாக அமல்படுத்தப்படுத்துள்ளதாக தொடர்ச்சியாக ஆட்சியிலிருந்த அனைத்து அரசாங்களும் காட்டிக்கொண்டன என்று கூறியுள்ளார்.

அனுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசு, சமஷ்டி முறையிலான கட்டமைப்பிற்கு பதிலாக ஒற்றையாட்சி என்கிற முறையையே முனெடுக்க திட்டமிடுகிறது என்பதை இந்திய பிரதமரின் பார்வைக்கும் அவர் கொண்டுவந்துள்ளார். மேலும், இலங்கை ஒற்றையாட்சியின் கீழ் தான் இருக்கும் என்று அனுர குமார திஸநாயக்க மீண்டும் மீண்டும் சொல்லிவரும் நிலையில், புதிய அரசியல் யாப்பிற்கு ஒப்புதல் பெற பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் போது தமிழர்களின் கவலைகள் மற்றும் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் குறித்தும் அவர் தமது கடிதத்தில் எழுதியுள்ளார்.

"13ஆவது திருத்தச் சட்டமே பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படை என்று கூறுவதில் மேலும் கூடுதலாக அரசியல் ஆபத்து உள்ளது. யதார்த்த ரீதியில், தமிழர்கள் தமது வரலாற்றில் முதல் முறையாக ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்வதாகிவிடும். அப்படி இடம்பெறும் பட்சத்தில், தமிழர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுகொள்வதன் மூலம் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டுள்ளனர், எனவே இனி இலங்கையில் எந்த வகையிலும் இன மோதல்கள் இல்லை என்கிற நிலைப்பாட்டை இலங்கை அரசு முன்னெடுக்கும் ஆபத்து உள்ளது".

இந்த காரணங்களுக்காகவே 13ஆவது திருத்தச் சட்டத்தை பேச்சுவார்த்தைக்கான தொடக்கப் புள்ளியாக கூட ஏற்க தமிழ் தேசிய மக்கள் முன்னணி மறுக்கிறது என்பதையும் தனது கடிதத்தில் அவர் தெளிவாக்கியுள்ளார்.

"இந்த பேச்சுவார்த்தைகள் காத்திரமாகவும், நேர்மையாகவும் இருக்கவேண்டுமென்றால், சிங்கள தேசத்தின் தலைவர்கள் தமது மக்களிடம், ஒற்றையாட்சிக்கு அப்பால் சென்று சம்‘டி கட்டமைப்பை பரிசீலிப்பதால் மட்டுமே தீர்வு ஒன்று எட்டப்படும் என்று தமது மக்களிடம் தெரிவிக்க வேண்டும். மேலும் சட்டரீதியாக நாட்டில் ஒற்றுமையை உறுதி செய்ய கால அவகாசம் தேவைப்படும்".

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், 13ஆவது சட்டத்திருத்தம், ஒற்றையாட்சிக்கு அப்பால் சென்று தமிழர்கள் பரிசீலிப்பதற்கான அடிப்படை வரம்புகளை கூட கொண்டிருக்கவில்லை என்று கூறியுள்ளார். அது மாத்திரமின்றி புதிய அரசாங்கம் தொடர்பில் முன்னாள் மற்றும் இந்நாள் அரசுகள் முன்வைக்கும் வரைபு அரசியல் யாப்பு தமிழர்கள் பரிசீலிப்பதற்கான அடிப்படை எதிரார்ப்பைக்கூட நிறைவேற்றவில்லை என்றும் கூறும் அவர், தமது கட்சியும் தமது கருத்துக்களை அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

"அந்த பிரேரணைகள் ஒன்றுபட்ட இலங்கைக்குள், சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டு, தனித்தனி தமிழ் மற்றும் சிங்கள தேசங்களை அவர்களது இறையாண்மையுன் அங்கீகரிக்க வேண்டும். அவை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருந்த அம்சங்களை மனதில் வைத்து அனுப்பப்பட்டன".

புதிய அரசியல் யாப்பு சிங்களமயமாக இருப்பதை தமிழர்கள் நிராகரிப்பதற்கு இந்தியா உதவ வேண்டும் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டியுள்ளார்.

"சமஷ்டி முறைமைக்கு மாறாக ஒற்றையாட்சிக்குள் இருக்கும் எந்த முன்மொழிவையும் தமிழ் மக்கள் நிராகரிக்கும் போது அதற்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என்று எமது அமைப்பு ஆழமாக இந்தியாவை வலியுறுத்துகிறது. மேலும் தமிழர்களுக்கு உரிய "மறுக்க முடியாத சுய நிர்ணய உரிமையை" உறுதிப்படுத்துவதுடன், தமிழ் தேசத்தை அங்கீகரித்து அதை பாதுகாக்கவும் இந்தியா ஆதரிக்க வேண்டும்".

இந்தியாவின் நியாயமான தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்தவும் தமது அர்ப்பணிப்பை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, மோடிக்கு எழுதிய கடிதத்தில் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவை வெளியிட்ட 44 பக்க தீர்மானத்தில், இலங்கையிலுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம், இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாக இருப்பதே என்று கூறியிருந்தது.

அந்த பேரவை பல்தேசியங்களை உள்ளடக்கிய இலங்கை தேசத்தை உருவாக்கிடவும், அதில் தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தை பேணவும், அவர்களின் சுய நிர்ணய உரிமையை உறுதிப்படுத்தவும், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷ‘களை அங்கீகரிக்கவும் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தது.

ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கும் மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்ரமசிங்க ஆட்சியால் முன்வைக்கப்பட்ட அரசியல் யாப்பில் மேலும் சில திருத்தங்களைச் செய்து புதிய அரசியல் யாப்பின் வரைபை சமர்ப்பிக்க தேசிய மக்கள் சக்தி அரசு திட்டமிட்டு வருகிறது.

## வீணாவின் கவிக்கணை

பசியில் அழுதிடும் குழந்தைக்கு
தாய்ப்பால் சொர்க்கம்,
மனம் உடைந்து நிற்கதியாய்
நிற்கையில் , அரவணைக்கும்
தாய் மடி ஓர் உன்னதமான சொர்க்கம்,
காதலிக்கையில் அவள்/அவன்
அருகிலிருப்பது இனிய சொர்க்கம்,
காதல் மனைவியுடன் / கணவருடன்
இன்பம் கொள்கையில்
அழகிய சொர்க்கம்,
தன்பிள்ளை தன்னை
அம்மா/ அப்பா என்றழைக்கையில்
ஒருவித அலாதியான சொர்க்கம்,
காலம் கடந்த பின்
இறை பக்தியுடன்
அமைதியடைவதும் மனம்
தெளிந்த சொர்க்கம் தான்,
வாழும் காலத்திலேயே கண்ணில்
தெரியும் இத்தனை சொர்க்கத்தை
அனுபவித்து விட்டால்,
இறந்த பின் செல்லும் சொர்க்கத்திற்கு
வழி தேட தேவையில்லை.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்குமிடையிலான கலந்துரையாடல்!



## தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோர்கள் காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக முறைப்பாடுகள்

தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் 17ம் திகதி அன்று (17.12.2024) யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் அவர்கள், ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவும், மாவட்டச் செயலகத்தில் 2024.12.11 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவும், தரம் 9 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புக்களுக்கான தனியார் கல்வி நிலைய மற்றும் குழு வகுப்புச் செயற்பாடுகளை மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காகவும், அறநெறிசார் செயற்பாடுகளக்காகவும், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்துவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத் தீர்மானமானது மாவட்டத்தின் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டதாகவும். பிள்ளைகளின் நலன்கருதி தனியார் கல்வி நிறுவனங்களின் அமைவிடங்கள், வகுப்பறைக் கட்டமைப்பு மற்றும் வசதிகள் தொடர்பிலும் நிறுவன உரிமையாளர்கள் கூடுதலான கவனம் செலுத்துமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

மேற்படி கலந்துரையாலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. தரம் 9 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புக்களுக்கான தனியார் கல்வி செயற்பாடுகள் மற்றும் குழு வகுப்புக்களைவெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்துவது எனவும். பிரதேச செயலாளர்கள் தமது உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்படி விடயத்தினை கண்காணித்து அறிக்கையிடுதல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

2. தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோர்கள் காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் / நிர்வாகிகள் இதற்கான சரியான பொறிமுறையினை மேற்கொண்டு போக்குவரத்து நெருசலை கட்டுப்படுத்த வேண்டும் எனவும், இந்த பொறிமுறையினை தாமாக நடைமுறைப்படுத்த தவறும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் பொலிஸாரின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.



3. பிரதேச செயலாளர்கள் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் தமது பிரதேசங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புக்களை தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், யாழ் மாவட்ட தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் இரவோடு இரவாக இடம்பெறும் பாரிய மணல் கொள்ளை



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் இரவோடு இரவாக சட்டவிரோத மணல் அகழப்படுவதாக அப்பகுதி மக்கள் இன்று (18.12.2024) தெரிவித்தனர்.



ஆழியவளை பகுதியில் மணல் மண் சட்டவிரோதமாக அகழப்படுவதாகவ பொலிசாருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், தெரியப்படுத்திய போதும் அவர்களால் குறித்த மணல் கொள்ளையை கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நள்ளிரவு நேரம் காவல்களை அமைத்து JCB இயந்திரம் கொண்டு டிப்பர்கள் மூலம் பாரிய மணல் கொள்ளையில் சட்டவிரோத மணல் கடத்தல்காரர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் குற்றம் சுமத்திய அப்பிரதேச மக்கள், பாதைகளை அழித்து வீதிக்கு அருகில் வைத்தே பெருமளவான மணல் வளத்தை சூறையாடி செல்வதால் தற்பொழுது பாதைகளிலும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என கூறுகின்றனர்.

மணல் மேடுகளை அழிப்பதால் கடல் நீர் குடி மனைகளுக்குள் புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. கிராம அலுவலர் ஊடாக மருதங்கேணி பிரதேச செயலர் மற்றும் மருதங்கேணி பொலிசாருக்கு அறிவித்தும் இதுவரை மணல் கொள்ளை தடுத்து நிறுத்தப்படவில்லை எனவும் யாரையும் இதுவரை கைது செய்யவில்லை என்றும் தெரிவித்தனர்.

உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொலிசாருடன் இணைந்து ஆழியவளை கிராமத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் கொள்ளையை தடுத்து நிறுத்தி தமது கிராமத்தை பாதுகாத்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமான "உலக சுற்றுலா தின" கலை கலாச்சார வாகன ஊர்தி நடைபயண நிகழ்வு!

பு. கஜிந்தன்



வடமாகாண சுற்றுலா பணியகம் மற்றும் வடமாகாண அமைச்சின் ஏற்பாட்டில், "சுற்றுலாவினை மேம்படுத்தி எதிர்காலத்தில் மாற்றத்தினை உருவாக்குவோம்" என்னும் கருப்பொருளில் உலக சுற்றுலா தின கலை கலாச்சார வாகன ஊர்தி நடை பயண நிகழ்வு 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமானது.



குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இவ் வாகன ஊர்தி நடை பயணம் யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமாகி அங்கியிருந்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதி, கே.கே.எஸ் வீதி ஊடாக சென்று யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் இனிதே நிறைவடைந்தது.

கலாச்சார நிகழ்வுகளான மேளதாள, நாஸ்வர இசைகள், சிறுவர் நடனங்கள், கோலாட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்டநிகழ்வுகள் நடைபெற்றன. மேலும் வாகன பவனியில் 1968 தொடக்கம் 2001ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மாதிரி புகையிரத வண்டி என்பன ஈடுபட்டன.

இதில் முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், வடமாகாண சுற்றுலா பணியகம், வடமாகாண அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் தனியார் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனரை தாக்கிய சந்தேகநபர் கைது!

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து தனியார் பேருந்து ஒன்றின் சாரதி மற்றும் நடத்துனரை தாக்கிய சந்தேகநபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை 15ம் திகதி அன்றையதினம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் புன்னாலைக்கட்டுவன் - யாழ்ப்பாணம் வழித்தட தனியார் பேருந்தினை மறித்து 3 பேர் கொண்ட குழுவினர், பேருந்தின் நடத்துனர் மீதும் சாரதி மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபர் உரும்பிராய் பகுதியில் வைத்து, யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகி உள்ளனர்.

கைதானவரிடம் மேற்கொள்ளப்பட்டு ஆரம்பகட்ட விசாரணைகளில், இன்னொருவரின் தூண்டுதலின் பேரிலேயே தாங்கள் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த 17.04.2024 அன்று இடம்பெற்ற நிலையில், குறித்த சந்தேகநபர்களை கைது செய்யுமாறு கோரி தனியார் பேருந்து சங்கத்தினர் கடந்த 20.04.2024 அன்று போராட்டம் ஒன்றினையும் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தமிழரசுக் கட்சியின் 75 ஆவது ஆண்டு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கடந்த புதன்கிழமை தமிழரசுக் கட்சி அதன் 75வது ஆண்டை நிறைவு செய்தது. ஆனால் கொண்டாடவில்லை. அதைக் கொண்டாட முடியவில்லை என்பதனை அந்தக் கட்சியின் அபிமானிகள் முகநூலில் பதிவு செய்கிறார்கள். ஏன் கொண்டாட முடியவில்லை?

ஏனென்றால் கட்சிக்கு தலைமை யார் என்பது தெளிவில்லாமல் இருக்கிறது. கட்சி இப்பொழுதும் நீதிமன்றத்தில் நிற்கின்றது. கடந்த 14ஆம் திகதி வவுனியாவில் நடந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தைத் தொகுத்துப் பார்த்தால் கட்சி இப்பொழுதும் ஒரு இறுக்கமான, உருகிப் பிணைந்த கட்டமைப்பாக இல்லை. கட்சிக்குள் எதிரெதிர் குழுக்கள் தோன்றி விட்டன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கட்சிப் பிரமுகர்கள் சுவரொட்டிகளில் ஒன்றாகத் தோன்றினார்கள். ஆனால் உள்ளூரில் இறங்கிப் பிரச்சாரம் செய்யும் பொழுது ஒருவர் மற்றவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கேட்டார்கள். வடக்கிலும் கிழக்கிலும் இதுதான் நிலைமை. கட்சிக்குள் தோன்றியிருக்கும் குழுக்களுக்கு இடையிலான பகைமையானது, வெளியாட்களுக்கும் கட்சிக்கும் இடையிலான பகைமையை விடவும் மூர்க்கமானதாக, கூர்மையானதாக காணப்படுகின்றது.

இந்தக் குழுக்களுக்கு யார் காரணம்? சந்தேகமே இல்லை. சம்பந்தரும் சுமந்திரனும் மாவையுந்தான் முதன்மைக் காரணம். சம்பந்தரும் சுமந்திரனும் மாவையும் செய்த தவறுகளைக் கண்டும் காணாமல் இருந்த அல்லது தங்களுக்குள் புறுபுறுத்துக் கொண்டிருந்த மூத்த உறுப்பினர்களும் காரணம். 75 ஆண்டு காலக் கட்சி எங்கே நிற்கின்றது என்பதற்கு தந்தை செல்வாவின் நினைவுத் தூபியே சாட்சி. ஆண்டின் பெரும்பாலான காலம் அந்தத் தூபியைச் சூழ்ந்து பற்றைகள் படர்ந்திருக்கும். தந்தை செல்வாவின் சிலைக்கு சம்பிரதாய பூர்வமாக வணக்கம் செலுத்தும் கட்சிக்காரர்களுக்கு சிலையைச் சூழ்ந்திருக்கும் பற்றைகளும் அந்த வளாகத்தின் துருப்பிடித்த வாயிற் கதவும் உறுத்துவதேயில்லை.

75 ஆண்டு காலம் என்பது ஏறக்குறைய ஒரு மனிதனின் முழு ஆயுளுக்கு கிட்ட வரும். 75 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி எதைச் சாதித்திருக்கிறது? என்பதைக் குறித்த ஒரு தொகுக்கப்பட்ட பார்வை அவசியம்.

தமிழரசுக் கட்சியின் தொடக்கம் புரட்சிகரமானது. மலையகத் தமிழர்களை நாடற்றவர்கள் ஆக்கும் விடயத்தில் அது முற்போக்கான முடிவை எடுத்தது. மலையாகத் தமிழர்களை நாடற்றவர்கள் ஆக்கியது என்பது தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பின் தொடக்கங்களில் ஒன்று. அந்த இடத்தில் தமிழரசுக் கட்சி சரியான நிலைப்பாட்டை எடுத்தது. ஆனால் அதற்காக அவர்கள் மலையகத் தமிழர்களையும் அரவணைத்துக் கொண்டு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. குரொம்சி கூறுவது போல "நீதியான நிலைப்பாட்டை எடுத்தால் மட்டும் போதாது. வரலாற்றின் மீது நிர்ணயகரமான விதங்களில் இடையூடு செய்ய வேண்டும்." ஆனால் தமிழரசுக் கட்சி மலையகத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, ஈழத் தமிழர்களின் விடயத்திலும் அவ்வாறு வரலாற்றின் மீது நிர்ணயகரமான தலையீட்டைச் செய்யவில்லை.

ஆங்கிலத்தில் அது சமஸ்டிக் கட்சி என்று அழைக்கப்பட்டது. ஆனால் கடந்த 75 ஆண்டுகளாக அந்தத் தீர்வை அவர்களால் பெற முடியவில்லை. ஏன் முடியவில்லை? இப்பொழுதும் அந்த தீர்வை பெறுவதற்கான வழிவகைகள் என்ன? அது தொடர்பான தெளிவான வழி வரைபடம் அந்தக் கட்சியிடம் உண்டா?

தமிழரசுக் கட்சிக்கு எப்பொழுதும் இரண்டு முகங்கள் உண்டு. ஒன்று வாக்களித்த மக்களுக்கு நெருக்கமான முகம். இன்னொன்று கொழும்புக்கு நெருக்கமான முகம். இந்த இரண்டு முகங்களும் தமிழரசுக் கட்சிக்குள் காலாகாலம் இருந்து வந்துள்ளன. யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளராகிய பேராசிரியர் ராமகிருஷ்ணன், அவருடைய நண்பர்களுக்குச் சொல்லுவாராம், "ஒரு பனங்காட்டானை தலைவர் ஆக்குங்கள் அவன் வாக்காளர்கள் சொல்வதைக் கேட்பான். கொழும்பானைத் தலைவன் ஆக்கி விடாதீர்கள்" என்று.

பனங்காட்டான் என்ற வார்த்தை யாழ்ப்பாணத்தவர்களை மட்டும் குறிக்கவில்லை. உள்ளூர் உணர்வுகளைக் குறிக்கின்றது. அதை கோட்பாட்டு அடிப்படையில் சொன்னால், தமிழ்த் தேசிய உணர்வுகளைக் குறிக்கின்றது. வாக்காளர் மைய நோக்குநிலை, கொழும்பு மைய நோக்கு நிலை இரண்டினதும் சேர்க்கைதான் தமிழரசுக் கட்சி.

சம்பந்தரின் காலத்தில் கட்சி கொழும்பை நோக்கி அதிகமாகச் சாய்ந்தது. ஆயுதப் போராட்டத்தின் அணுகுமுறைகள் தவறானவை என்று சம்பந்தர் கருதினார். ஆயுதப் போராட்டம் கொழும்பைப் பகை நிலைக்கு தள்ளிவிட்டது என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களை அரவணைக்க வேண்டும், சிங்கள மக்களின் பயங்களை அகற்ற வேண்டும், அதன் மூலம்தான் ஒரு தீர்வைப் பெறலாம் என்றும் சம்பந்தர் நம்பினார். அந்த அடிப்படையில் அவர் சிங்கள மக்களின் பயங்களைப் போக்குவதற்காக ஆகக் கூடிய மட்டும் விட்டுக் கொடுத்தார். "சம்பந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் காணவேண்டும். அவரைப்போல விட்டுக்கொடுக்கும் ஒரு தமிழ்த் தலைவர் இனி வரமாட்டார்" என்று டிலான் பெரேரா நாடாளுமன்றத்தில் உரையாற்றியது சரி.

ஆனால் சம்பந்தர் அடியொட்ட வளைந்து கொடுத்தும் இனப்பிரச்சனைக்கான தீர்வைப் பெற முடியவில்லை. அது மட்டுமல்ல அதன் விளைவாக அவர் கட்சியின் பலத்தையும் உடைத்து விட்டார். ஏறக்குறைய ஒரு தோல்வியுற்ற தலைவராகவே அவர் இறந்தார். அவருடைய இறுதிக் காலத்தில் அவருடைய வாரிசுகளே அவர் சொன்னதைக் கேட்கவில்லை. அவர் எதிர்பார்த்த தீர்வையும் பெற முடியவில்லை. கட்சியின் கூட்டுணர்வையும் கட்டிக்காக்க முடியவில்லை. கட்சிக்குள் இப்பொழுது தோன்றியிருக்கும் குழுக்கள் சம்பந்தரின் அரசியலால் உற்பத்தி செய்யப்பட்டவைதான். விளைவாக கட்சி இப்பொழுது நீதிமன்றத்தில் நிற்கின்றது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் கொழும்பை நோக்கிச் சுதாகரிக்கும் சிந்தனை தோற்கடிக்கப்பட்டது. சுமந்திரன் அவருடைய கட்சி ஆட்களால் நிராகரிக்கப்பட்டார். வெளிப்படையாக அவர் அந்த தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருந்தாலும், நடைமுறையில் அவர் அந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்ளவில்லை என்பதைத்தான் பின்னர் நடந்தவை நிருபித்தன. இந்த ஆண்டு சுமந்திரனை பொறுத்தவரை தோல்விகரமான ஆண்டு. ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்காரர்கள் அவரைத் தோற்கடித்தார்கள். ஆண்டின் முடிவில் தமிழ் மக்கள் அவரைத் தோற்கடித்தார்கள். ஆனால் தோல்விகளில் இருந்து அவர் பாடங் கற்றிருக்கிறாரா?

உள்ள கட்சிகளில் தமிழரசுக் கட்சிதான் தமிழர் தாயகம் எங்கும் பரவலான கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றது. தனி ஒரு கட்சியாக இம்முறை தமிழரசு கட்சிதான் அதிக ஆசனங்களை வென்றிருக்கிறது. அதை ஒரு வெற்றி என்று சுமந்திரன் உட்பட பலரும் கருதுவதாகத் தெரிகிறது. தவறு. தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவம் மேலும் குறைந்திருக்கிறது. ஒரு தேசமாகத் தமிழ் மக்கள் மேலும் பலவீனமடைந்திருக்கிறார்கள்.

கடந்த 15 ஆண்டுகால தமிழ் அரசியலில் பிரதான கட்சியாகவும் ஏறக்குறைய தீர்மானிக்கும் கட்சியாகவும் தமிழரசு கட்சிதான் இருந்து வந்துள்ளது. கட்சியின் மூத்த தலைவர்கள் அதைப் பெருமையோடு கூறிக் கொள்கிறார்கள். எனவே கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ்த் தேசிய ஆசனங்கள் ஏறக்குறைய அரைவாசி அளவுக்கு குறைந்தமைக்கு யார் பொறுப்பு? மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மூத்த அரசியல் வாதியான சிவஞானத்தைப் பார்த்து அர்ஜுனா நீங்கள் யார் என்று கேட்கும் நிலைமை ஏன் தோன்றியது? 22 ஆசனங்களில் இருந்து பத்தாகி விட்டது. அந்தத் தோல்வியை சுய விசாரணை செய்வதா? அல்லது ஒரு தனிப் பெருங் கட்சியாக கிடைத்த ஆசனங்களைக் கொண்டாடுவதா?

அந்த வெற்றியைக் கொண்டாடுவது என்பது தேசத்தின் பின்னடைவை விளங்கிக் கொள்ளாமையே. தேசத்தைத் திரட்டாவிட்டால் கட்சிகளையும் திரட்ட முடியாது என்பதனை இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் எல்லாத் தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் நிரூபித்திருக்கிறது.

ஆனால் தமிழரசுக் கட்சியோ அல்லது சுமந்திரனோ தேர்தல் முடிவுகளில் இருந்து கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அண்மையில் வவுனியாவில் நடந்த மத்திய செயற் குழுவின் கூட்டம் அதைத்தான் உணர்த்துகின்றது.

அப்படிப்பட்டதோர் கட்சிச் சூழலில், சமஸ்ரியை அடையாத 75ஆவது ஆண்டு கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட ஓர் ஆண்டு தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் மேலும் சுருங்கிப் போன ஓர் ஆண்டு, வெற்றியாண்டா? தோல்வியாண்டா?

---

## பாலன் பிறப்பைக் கொண்டாடுவோம் (கும்மி)

*பெத்லேகம் நகரிலே மாட்டுத் தொழுவமதில்*
*பாலனாம் யேசு பிறந்துவிட்டார்*
*நித்திய சீவனை மாந்தருக் கீந்திட*
*நிமலனாம் யேசு பிறந்துவிட்டார்*

*பாவங்கள் போக்கவும் சாபங்கள் நீக்கவும்*
*பாரினில் யேசு அவதரித்தார்*
*சேவகங்கள் செய்தே போதனைகள் தரவே*
*சாத்வீக நாயகன் பிறந்துவிட்டார்.*

*சோதியின் ரூபமாய் ஒளிர்கின்ற பாலனை*
*தோத்திரம் செய்தேநாம் ஆதரிப்போம்*
*போதகன் பாதம் பணிந்தே நாமும்*
*பாசமுடன் பாடி ஆடிடுவோம்.*

*அகிலம் சிறக்கவே அருமை மைந்தனாம்*
*அமலன் யேசு பிறந்துவிட்டார்*
*அகிலின் வடிவமாய் அவதார புருசனாய்*
*அற்புதன் யேசு அவதரித்தார்.*

*பாலகன் யேசு பிறந்து விட்டாரென*
*பாசத்துடன் பாடி ஆடுங்கடி*
*கோலமுடன் நம்மைத் தேடியே வந்திட்ட*
*கோமானை நேர்த்தியாய் வாழ்த்துவோமே!*

*தேவாதி தேவனாம் ஏகசுதன் யேசு*
*தேவ குழந்தையாய் வந்துதித்தார்*
*பாவிகள் பாவத்தை போக்கவே இன்று*
*பாரினில் மானிட உருவெடுத்தார்.*

*விண்ணோர் வியந்திட மண்ணோர் மகிழ்ந்திட*
*விண்ணிலே தாரகை வழிகாட்ட*
*மண்ணிலே இடையரும் மகிழ்வுற்று வணங்கிட*
*மாதரும் கூடியே மகிழ்ந்தனரே!*

*மாடிமனை இன்றி ஏழைக் குடிசையில்*
*மன்னவன் யேசு பிறந்துவிட்டார்*
*ஆடவர் சேர்ந்து தோத்திரம் செய்தே*
*அண்ணலை வணங்கிடச் சென்றிடுவோம்.*

*கன்னி மரியாளின் கண்கவர் பாலனாம்*
*காவலன் யேசுவைப் போற்றிடுவோம்*
*கன்னித் தமிழாலே கானங்கள் இசைத்தே!*
*கண்மணிப் பாலனைப் போற்றுவோமே!.*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

கனடிய செய்திகள் Canadian News

# கனடா "உதயன்" பத்திரிகையின் தொடர்ச்சியான ஊடகப் பணிகளுக்கு ஒரே மேடையில் பல துறைகளைச் சார்ந்தவர்கள் புகழாரம் சூட்டினர்

கனடாவின் ஸ்காபுறோ நகரிலிருந்து தொடர்ச்சியாக கடந்த 28 வருடங்களாக வெளிவரும் "மக்கள் பத்திரிகை"யான கனடா உதயன் தனது 28வது ஆண்டு விழாவை பல்சுவைக் கலை நிகழ்ச்சிகளோடு கடந்த சனிக்கிழமையன்று 14ம் திகதி (14-12-2024) "கென்னடி கொன்வென்சன் சென்றர்" மண்டபத்தில் நடத்தியது.

உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தலைமையில் இயங்கிய விழாக்குழுவில் தேசம் மாத இதழின் வெளியீட்டாளர் சங்கர் சிவநாதன் மற்றும் மரியாம்பிள்ளை மரியராஜா அத்துடன் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் செயற்பட்டனர். கனடாவில் உள்ள பல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நண்பர்கள் பலரது ஆதரவும் சில கலை சார்ந்த அமைப்புக்களும் உதயன் பத்திரிகையோடு தோளோடு தோள்நின்று இந்த விழாவை அழகிய முறையில் நடத்த உதவினர். கனடாவில் உள்ள பல ஊடக நண்பர்கள் உதயன் பல்சுவைக் கலைவிழா பற்றிய செய்திகளையும் அறிவுப்புக்களையும் சிறப்பாகச் செய்திருந்தனர் என்றால் அது மிகையாகாது.

உதயன் பல்சுவைக் கலை விழாவிற்கு சிறப்புப் பேச்சாளராக தமிழகத்திலிருந்து "தமிழா! தமிழா!" தொலைக்காட்சி புகழ் கரு பழனியப்பன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.




அத்துடன் அழைக்கப்பெற்ற அரசியல் பிரமுகர்களான தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி, மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் மற்றும் மாகாண அரசின் உறுப்பினரும் ஒன்றாரியொ அமைச்சு ஒன்றின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி மற்றும் எம்.பி சல்மா சாகிட், மாகாண அரசின் அமைச்சர் கௌரவ ரேமண்ட் சோ. மத்திய அரசின் பாராளுமன்ற உறுப்பினர் சுவான் சென் மற்றும் எம்பி சல்மா சாகிட் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் கனடா உதயன் பத்திரிகையின் சேவையினையும் அதன் பிரதம ஆசிரியரின் மகத்தான ஊடகப் பணியையும் பாராட்டி உரையாற்றினார்கள்.





இவ்வருட விழாவில் கனடாவில் புகழ்பெற்ற மெல்லிசைக்குழுவான "ஆரோசை" இசைக்குழுவின் இனிய மெல்லிசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. பார்வையாளர் இறுதிவரை இருந்து உணவருந்திய வண்ணம். இசை மற்றும் நடனங்களை ரிசித்து மகிழ்ந்தனர்.

நடன ஆசிரியை அற்புதராணி கிருபைராஜ் அவர்களின் மாணவிகள் வழங்கிய அழகிய நடனம் சபையோரைக் கவர்ந்தது. அதே போன்று ஏனைய கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்தன.







விழா நிகழ்ச்சிகளை தமிழில் ஜஸ்ரின் போல் அவர்களும் தம-ிழில் செல்வி ஹம்சா சாந்தகுமார் அவர்களும் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்கள்.



























அன்றைய விழாவிற்கு அனுசரணை வழங்கிய கேரி குரூப் - வைபவரன் ஹொஸ்பிட்டாலிற்றி குரூப் மற்றும் லத்திகா நகை மாளிகது கொம்பியுடெக் கல்வி நிறுவனம் உட்பட பல வர்த்தக நிறுவனங்களுக்கு உதயன் நிறுவனம் நன்றி தெரிவித்து கேடயங்களை மேடையில் வழங்கியது. அவற்றை திரு. கரு பழனியப்பன் அனைவருக்கும் வழங்கினார்.

அன்றைய விழா மேடையில் கனடா "உதயன்" பத்திரிகையின் 28 வருட கால தொடர்ச்சியான ஊடகப் பணிகளுக்கு பல துறைகளைச் சார்ந்தவர்கள் புகழாரம் சூட்டினார்கள்.அரசியல்டி தலைவர்கள் மற்றும் திரு. கரு பழனியப்பன் உட்பட சிறப்புரைகளை ஆற்றிய நிமால் விநாயகமூர்த்தி மற்றும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு. அரி அரிகரன் ஆகியோரும் பாராட்டுக்களைப் பகிர்ந்து கொண்டனர்.





**வீடியோ நேரலை, படங்கள் - ஜிரிஏ மீ-டியா குரூப் கெங்கா - தமிழாரம் மீடியா குருப் கேதீஸ் மற்றும் நண்பர் ரகுமாறன் கிருஸ்ணா ரெலிகாஸ்ட் கிருஸ்ணலிங்கம் - யுகம் வானொலி கணபதி ரவீந்திரன் - தமிழ் வண் தொலைகாட்சி மற்றும் ஊடகச் சேவை ஆகியோருக்கும் நன்றி.**

# GTA Square Mallஇல்

நத்தார் பண்டிகை, புத்தாண்டை முன்னிட்டு
எம்முறையும் இல்லாமல் இம்முறை மாபெரும் மலிவு விலையில்....

SALE!
SALE!!
SALE!!!

# Gift Plus






## Unit #104, 5215 Finch Ave East

சாமி சிலைகள், சிறுவர்களுக்கு ஏற்ற
பலவிதமான விளையாட்டு பொருட்கள்,
திருமணம், பிறந்தநாள் போன்ற
வைபவங்களின் போது கொடுக்கப்படும்
அன்பளிப்பு பொருட்கள், Key Chains,
மற்றும் சிறிய அளவிலிருந்து
பெரியளவிலான குபேர சிலைகள்
இன்னும் பல ஒரே இடத்தில்
பெற்றிடலாம்.





**Unique gifts for many occasions at GIFT PLUS !!!!!**

## Sooriya Fancy

*Unique pieces for purchase and rental*

ஜிமிக்கி Reg: $15 Sale: $5

Unit #103 T.P: 647 537 4990

## Murugan Book Stores

*5 Books only $40*

Unit #109 T.P: 416 321 0285

## Tides Dry Cleaner & Custom Tailor

Open 7DAYS

*Until Jan 31st 2025*

5 Regular shirts $12.99 + Tax

Unit #108 T.P: 416 291 9777

## LR Tailoring

*Senorita Bra for Sale $5*

Unit #163 T.P: 647 687 8218

## SHAKTHI DESIGNERS

$150சல்வார் $50க்கு விற்பனை

Unit #126 T.P: 905 670 9094
416 297 1670

## Rising Beauty Parlour

*Experience the ultimate relaxation with 50%off all facials*

Unit #102 T.P: 416 727 0927

## Winners lotto centre

*Copy, fax, scan, print, snacks, drinks & calling cards*

*Magic speaker for sale $10*

Unit #159 T.P: 416 291 9990

## U Mobile

Unlimited Talk & Text

30GB $29 85GB $40. 110GB $50

Unit #152 T.P: 416 319 1111


Wishing you and your family a
Merry Christmas &
a Happy New Year!
VIJAY
THANIGASALAM
MPP - Scarborough-Rouge Park
8130 Sheppard Avenue East, Unit 105,
Scarborough, ON M1B 3W3
416-283-8448
vijay.thanigasalam@pc.ola.org
vijaythanigasalam.ca


NISSAN
VILLAGE NISSAN
தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு
சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்
2025 KICKS PLAY S
LEASE FROM $298 MONTHLY WITH $1,299 DOWN.
THAT'S LIKE PAYING
$69 WEEKLY
AT
4.99% APR
FOR 39 MONTHS O.A.C.
PLUS, QUALIFYING NISSAN OWNERS MAY RECEIVE UP TO
$500 IN LOYALTY BONUS
OFFER ENDS JANUARY 2ND, 2025.
NISSAN
WINTER READY
EVENT
Sajanthan Vijayakumar
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com
NISSAN
VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com
HWY 7
HWY 407
Kennedy Rd.
South Unionville Ave.
N

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly – Brampton

15 Kenview Blvd; Unit 3 (Upstairs) Brampton, On.L6T 5G7

### கிறிஸ்மஸ் நள்ளிரவுஆராதனை

2024 டிசம்பர் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணிக்கு
இயேசுவின் பிறப்பை மனமகிழ்ச்சியுடன் நினைவு கூருவோம்

நமக்கு ஒருபாலகன் பிறந்தார், நமக்கு ஒருகுமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம்
அவர் தோளின்மேலிருக்கும்,அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா,
வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா,சமாதானப்பிரபு என்னப்படும்.– ஏசாயா 9: 6

### புதுவருட நள்ளிரவு ஆராதனை–2024

2024,டிசம்பர் 31ம் திகதி செவ்வாயக்கிழமை இரவு 11.000 மணிக்கு
2025ம் ஆண்டின் ஆரம்பத்தை தேவசமுகத்தில் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிப்போம்

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்,
உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.– சங்கீதம் 65: 11

### இயேசுவின் நாமம்

இயேசுவின் நாமம் இனிதானநாமம், இணையில்லாநாமம் இன்பநாமம்
பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்,பரமசந்தோஷம் பக்தருக்களிக்கும்
பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்,பார் எங்கும் வாசைன வீசிடும் நாமம்
வானிலும் பூவிலும் மேலானநாமம்,வானாதி வானவர் இயேசுவின் நாமம்
நேற்றும் இன்றும் என்றும் மாறிடாநாமம், நம்பிநோரை என்றும் கைவிடாநாமம்
முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம், மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்
சாத்தானின் சேனையை ஜெயித்திட்டநாமம்,சாபப் பிசாசை துரத்திடும் நாமம்
எல்லாம் வல்ல இயேசுவின் நாமம்

### இயேசுசொன்னார்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில்
பிதாமகிமைப்படும்படியாக,அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள்
எதைக் கேட்டாலும் அதைநான் செய்வேன்.– யோவான் 14: 13–14

### இலவசம்

பயப்படாதே,பாவம் செய்யாதே,பரிசுத்தராய் இருங்கள்,தேவவார்த்தை ஜீவ வார்த்தை,
படைப்புகளை வணங்காதே– படைத்தவரை வணங்கு,தேவனே பரிசுத்த ஆவியானவர் ஆகிய
ஆவிக்குரிய புத்தகங்களை இலவசமாகப் பெறவிரும்புவோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

### மேலும்

ஜேப தேவைகள் எதுவாயிருப்பினும் எம்மோடு தொடர்புகொண்டால் தொலை
பேசிமூலமோ,நேரில் எம்மிடம் வந்து ஜெபிக்கவோ ஆயத்தமாயிருக்கிறோம்
ஜேபத்தில் விடுதலை பெற்றஅநேக சாட்சிகளையும் அறிந்து கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாஸ்டர் அல்பிரட் செருபிம்
647 – 271 7645

அனைவருக்கும் எமதுகிறிஸ்மஸ் –புதுவருடவாழ்த்துக்கள்



# கல்வியாளர்– பல்கலை அலோசகர் மற்றும் கலாரசிகர்,
# அதிபர் அமரர். பொ. குனகசபாபதி
## அவர்களது 10வது ஆண்டு நினைவஞ்சலி

அகிலத்திற்கோர் வித்தியாபதி
“காலா வாடா உனைக் காலால் உதைப்பேன்“ என வாழ்நாளில் பலதடவை எச்சரித்த எங்கள் கரிகாலன் கனகசபாபதி ஏன் இன்று மௌனியானார்? மரணித்துவிட்டார் என்று பொய்யுரைக்க முடியவில்லை.

ஏனென்றால் மரணம் அவர் வீட்டு வாயிலில் பல தடவைகள் போர் தொடுத்துத் தோல்வியைத் தழுவியது. இப்படியும் ஒரு மானுடன் இருக்கின்றானா? என வினாவிய தர்மராஜனுக்குக் கிங்கரர்களால் பதில் சொல்ல முடியவில்லை. சித்ரபுத்ரன் தலைகுனிந்து மரணப் பதிவேடுகளில் தேடியபோது வேறு, வேறு கனகசபாபதிகளைத்தான் காணமுடிந்தது. அதிபர். கனகசபாபதி தில்லைக்கும் அதிபதியல்லவா. ஆம்! தில்லையில் நடம்புரியும் கனகசபாபதியின் மானுட வடிவம் தான் எங்கள் அதிபர்!

உயிர் பறிப்பவர்களைச் சற்றுத் தொலைவில் நிற்க வைக்கும் மருத்தவ மாணவர்களைப் பயிற்றுவித்த பிரமமனிவர். “அழித்தல் “கடவுளுக்குச் சவால் விடும், காத்தல் கடவுளைக்குச் சவால் கணக்கின்றிப் படைத்தல் செய்த மருத்துவ உயிரியல் வித்தகன் விடைபெற்றுப் போனது விண்ணுலக விருந்துக்கல்லவா! விட்டுச் சென்றது ஏராளம். அட்டியின்றிச் கல்வி கற்க வந்தோர்க்கும், வட்டியின்றி வரவு இன்றி கல்வி தந்த கர்ணன் இவர். தொட்டிலடிச் சந்திக்கருகேதான், சண்டிலிப்பாய் ஊர் பிறந்தார். சிறந்தார். கண்டிலமே இவர் போன்று கனவித்தை (கள்) கற்றோனை கண்டியிழுக்கும் சமையல் சுவைத்து மகிழ்ந்திடுவார். பெண்டிலர் பிள்ளைகளைப் பேணியே காத்திடுவர்.

வண்டி நிறை வாசிப்புத் தீனியைக் கொண்டுவந்து போட்டாலும், அன்றைக்கே அத்தனையும் வாசித்து முடித்திடுவார். வாசித்து இரசித்ததைச் சிலாகித்தப் பேசிடுவார். நேசித்த பெரியோரை நினைவில வைத்திருந்து, வாசிக்கச் சொல்லி வரைந்த கதை எத்தனையோ! கல்கி, கலைமகள், குமுதம், குங்குமம், ஆனந்தவிகடன், பொம்மை, துக்ளக் புதுப்புது புதினங்கள் வார இதழ் வாசிப்பதில் வாழ்நாள் சாதனையாளர் இவர்! வாழ்வியல் ஞானங்கள், ஊழ்வினை நோய்களின் விண்ணாணங்கள். மூழ்கி, மூழ்கி விளையாட்டு விநொதங்கள். வெண்திரைக்காவியங்கள், பள்ளியில் சொல்லாத பகிடிநிறை பூராயங்கள், சலங்கையொலி ஓசையுடன் சதிர் ஆடும் கச்சேரிகள்.சங்கத்து இலக்கியங்கள் சந்தித்த நினைவுகள் தூங்காது எழுதுகின்ற பாங்கான கட்டுரைகள் என எழுதிய ஓங்கு புகழ் வித்தகன். காங்கேயன் (துறை) மருமகன். பங்கயத்தாள் கௌரி மணாளனாய் காலமெல்லாம் வாழ்ந்த கலியுக இராமனிவர்.

ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியாக் கண்டங்களின் தேசிய வாதியாய் இவர் ஒருவர்தான். பூமியை வலம் வந்தார்.
சாமியே இவர் தானென்று வணங்கிடும் மாணவர்கள் மனம் கவர்ந்த தெய்வமகன். மகானாகி விட்டார். தொட்டுத் துலங்காத துறைகள் எதுவுமில்லை. கொட்டு மண் உரம் கலந்து உள்ளேயும், வெளியேயும் வீடு சுற்றி வளர்த்து விட்ட வித விதமான செடி,கொடிகள். காட்டுப் பூ தொடங்கி கண்கவர் புந்தோட்டம். ஊட்டியில் உலாவரும் உலக மலர்க்காட்சியென தாலாட்டி வளர்த்து விடும் தாவரவியல் ஞானியிவர்.
சொட்டுமை தொட்டு தூரிகையால் எழுதியதும்.
பட்டு விரித்த அரங்குகளில் முத்தாகப் பேசியதும்,
கட்டுரைகள் பல எழுதிக் காகிதமாய்க் குவித்து வைத்து
எட்டுக்கு மேற்பட்ட எண்ணிக்கை நூல்களாய் வெளியிட்டு,
எட்டுத் திக்கும் வாழ்கின்ற மகாஜனப் பெரியாரால் கொட்டு முரசு கொட்டி வரவேற்று, வாழ்த்துரைக்க வானளாவிய புகளோடு வாழுகின்ற அதிபர். பொ.. கனகசபாபதி ! அகிலத்திற்கோர் வித்யாபதி!
“மணிவிழா மேடையிலும் மனமகிந்து வாழ்த்திசைத்தேன். இனியவிழா, பவளவிழா“ அகவைதனில் ஆனந்தப் பாட்டிசைத்தேன். இனியொரு விதி செய்து மீண்டும் அழைத்துவிட மந்திரக் கவிதைதனை மனவெளியில் தேடுகின்றேன்.
எட்டித்தொட முடியாத உயர்ந்த பெருமகனார். இன்னும் சில சிகரங்களைத் தொட்டுவிடச் சென்றாரோ. வணக்கத்திற்கும், போற்றுதலுக்குமுரிய வரலாற்று நாயகர்கள் சிலர் கணக்கில் பன்னிரண்டாம் மாதத்தில் தான்
உதித்தார்கள். மரித்தார்கள். இவர்கள்தான் டிசம்பர் பூக்களோ.....
இந்தப் பூக்கள் பூசைக்குரியனவா....பூசனைக்குரியனவா?
டிசம்பர் பூக்களே உங்களை நான் பூசிக்கின்றேன்.

-வீணைமைந்தன்- கனடா









Season's
Greetings
Hon.
MARY NG, MP
MARKHAM—THORNHILL
905-479-8100
Mary.Ng@parl.gc.ca
MaryNgMP.ca


Carefirst Family Health Team
Carefirst
Family Health Team
Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்
• அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
• உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
• நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
• நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.
அவர் விபரம்:
டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)
டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.
உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.
Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam
Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca
11/24
Steeles Ave.
McNicoll Ave.
Finch Ave.
Kennedy Road
Midland Ave
N


Happy Holidays!
Wishing you a joyous holiday season filled with warmth, love and cherished moments! May the New Year bring you peace, happiness, and prosperity. Thank you for your continued support!
Warmest wishes!
Ontario
Andrea Hazell MPP,
Scarborough-Guildwood
416 281-2787
ahazell.mpp.co@liberal.ola.org
www.andreahazell.onmpp.ca

# Sri Lanka Urged to Arrest Israeli Soldier Accused of War Crimes and Hand Over to ICC

A Brussels-based Human Rights Organization claims an Israeli soldier responsible for the death of a Palestinian civilian has been located in the Sri Lankan capital Colombo.

The Hind Rajab Foundation (HRF) has demanded the arrest and prosecution of the said Israeli soldier who they identify as Gal Ferenbook not only for the death of the Palestinian but also for degrading of their body.

Claiming the accused Israeli soldier is now in Colombo, the Foundation has formally demanded the Sri Lankan Authorities arrest him immediately and cooperate with the International Criminal Court (ICC).

"A formal complaint has also been submitted to the ICC and the case has been communicated to Interpol to issue an international 'Red Notice' for his apprehension.

On Thursday Sri Lanka government spokesperson Dr. Nalinda Jayatissa said that he doesn't have the information at hand and promised to provide an update in the next cabinet press briefing.

HRF in their statement has detailed what they claim to be evidence against the Israeli soldier.

"On August 9, 2024, Gal Ferenbook, a member of Company B, Sayeret Golani, publicly shared a video on his Instagram account that shows Mr.Ferenbook inside an armored personnel carrier (APC) in Gaza, looking at the remains of a deceased Palestinian civilian on the vehicle's monitor".

Posting further what HRF claims as proof, it quotes a second individual's voice> speaking in Hebrew, mocking the situation and referring to Mr.Ferenbook by his nickname.

"We are here with Gal Foundouk (nickname of Mr Ferenbook) Our terminator! Here, here are the remains of the body (laughs), and here's the terminator!".

After this, HRF alleges "Mr.Ferenbook can be seen laughing proudly, treating the deceased as a war trophy and boasting about his involvement in the killing".

According to the release by HRF, the particular video, combined with its contextual evidence and embedded metadata confirms their allegation of Mr. Ferenbook's presence in Gaza during Israeli military operation and his involvement in actions that violate international humanitarian law, including outrage upon the personal dignity of the deceased.

"The mocking and celebratory tone strongly suggest Mr. Ferenbook's direct responsibility for the unlawful killing of a Palestinian civilian and further documents the destruction of civilian infrastructure outside of military necessity".

Having placed what they claim to be strong and compelling evidence, HRF now seeks strong action from the Government of Sri Lanka to ensure justice for the deceased Palestinian, urging the island nation to act according to its international obligations.

"A demand has been officially communicated to Sri Lankan law enforcement and relevant ministries to arrest and detail Gal Ferenbook while facilitating cooperation with the ICC. Sri Lanka is urged to act under international legal principles, including the prohibition of impunity for war crimes".

Apart from the formal demand to the Sri Lankan government, HRF has also lodged a complaint with the ICC, under Article 15 of the Rome Statute, requesting the top international court to open an investigation into the Israeli Soldier Gal Ferenbook.

Three specific charges-outraging personal dignity, willful killing of a protected person, and destruction of civilian infrastructure. has been made against him in the ICC, under various articles of the Rome Statute.

The Hind Rajab Foundation has also written to Interpol to issue an international 'Red Notice' for the immediate apprehension of Gal Ferenbook.

HRF goes on to allege, that this particular case reflects what they call a "systematic pattern of violations" committed by Israeli forces in Gaza.

In their communication to Interpol, HRF says the case against the Israeli soldier is an example "Extrajudicial killings of civilians, Desecration and degrading treatment of deceased individuals and Unlawful destruction of civilian infrastructure" in Gaza. They point out these violations are only illustrative and not exhaustive.

In their indictment, HRF says Sayeret Golani, an elite reconnaissance unit of the Golani Brigade has been repeatedly implicated in similar violations during Israeli military operations in Gaza.

"This incident further highlights the deliberate dehumanization of Palestinian victims, which constitutes war crimes under international law.

Gal Farenbook has blood on his hands. Not only he desecrated the dignity of a deceased Palestinian civilian but also boasts and take credit for this unlawful killing. His presence in Sri Lanka presents a crucial opportunity to ensure accountability".

Now, the HRF wants the Sri Lankan authorities to act decisively, detain Gal Farenbook immediately, and facilitate cooperation with the ICC.

It also calls upon the ICC to investigate and prosecute him for war crimes under the Rome Statute and the Interpol to issue a Red Notice to prevent him from fleeing and ensure he faces justice. Sri Lanka should send a message that impunity for such atrocities will not be tolerated.

Critics point out, that Sri Lanka is yet to act decisively to prosecute their own security forces alleged to have committed gross human rights violations and crimes against humanity. None of the accused in the Sri Lankan tri-services have been held accountable and a culture of impunity continues to exist protecting the state forces. Sri Lanka is not a member state of the ICC.

The Hind Rajab Foundation is a branch of the March 30 Movement mainly dedicated to the quest for justice in response to the crimes against humanity, war crimes, and human rights violations perpetrated by the Israeli state against Palestinians.

On November 21, 2024, the International Criminal Court (ICC) issued arrest warrants for Israeli Prime Minister Benjamin Netanyahu and former Defense Minister Yoav Gallant, as well as Hamas military commander Mohammed Deif.





Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# "கலாநிதி"களினால் கலங்கும் அநுர அரசு



***"பாராளுமன்றத் தேர்தலில் வரலாற்று வெற்றி, அதிக "கலாநிதி"களைக்கொண்ட அரசு என நெஞ்சு நிமிர்த்தி நின்ற அநுர அரசு இன்று போலி "கலாநிதி"பட்ட சர்ச்சைகளினால் சபாநாயகர் பதவி விலகியுள்ளதுடன் ஏனைய பலரும் இந்த சர்ச்சையில் சிக்கியுள்ளதால் தலைகுனிந்துள்ளது நிலையில் அநுர அரசின் ஊதிப் பெரிப்பிக்கப்பட்ட விம்பம் சிறிது சிறிதாக விலகத் தொடங்கியுள்ளது."***

**------------------------------------------------------------ - கே. பாலா ----**

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தலில் நேரடி வாக்குகள் மூலம் 141 ஆசனங்கள் தேசியப்பட்டியல் மூலம் 18 ஆசனங்கள் என 159 ஆசனங்களை ப்பெற்று வரலாற்ற வெற்றியை பதிவு செய்ததுடன் அதிக "கலாநிதி"களைக் கொண்ட அரசு எனவும் வர்ணிக்கப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அந்த "கலாநிதி"களே வினைகளாகவும் வில்லங்கங்களாகவும் மாறியுள்ள நிலையில் "கலாநிதி"சர்ச்சையில் சிக்கி சபாநாயகரான அசோகா சபுமல் ரன்வல தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளமை அநுரவின் "ஒழுக்க சீலர்"களைக்கொண்ட அரசுக்கு பெரும் பின்னடைவாகவே அமைந்துள்ளது.

கடந்த நவம்பர் 14 ஆம் திகதி இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் இடம்பெற்றது. இதில் 159 ஆசனங்களைக் கைப்பற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப்பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசமைத்தது. இந்நிலையில் 10 ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு கடந்த நவம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்றதுடன் அன்றையதினமே புதிய சபாநாயகர், பிரதி சபாநாயகர், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர், சபை முதல்வர், அரசதரப்பு மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடாக்கள் தெரிவு, ஜனாதிபதியின் கொள்கைப்பிரகடன உரை என்பனவும் இடம்பெற்றன.

## யார் இந்த அசோக சபுமல் ரன்வல?

இந்தக்கன்னி அமர்வில் 10 ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகர் பதவிக்கு தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு 109,332 வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற அசோக்க சபுமல் ரன்வலவின் பெயரை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய முன்மொழிந்தார். இதனை வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் வழிமொழிந்தார். சபாநாயகர் பதவிக்கு எதிர்க்கட்சிகளின் சார்பில் பிறிதொருவரின் பெயர் முன்மொழியப்படாத நிலையில் பத்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக அசோக்க சபுமல் ரன்வல வாக்கெடுப்பின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அசோக சபுமல் ரன்வல பாராளுமன்ற அரசியலுக்கு புதியவராக இருந்தாலும் ஜே.வி.பி.யில் அவர் ஒரு ஆரம்பகால உறுப்பினர். தனது தொடக்கக் கல்வியை யட்டியான தொடக்கப் பாடசாலையிலும், ஹெனிகம மத்திய கல்லூரியிலும் கற்றார். 1980களில் ஜே.வி.பி.யுடன் இணைந்து கொண்ட அவர், பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலைய ஊழியராகப் பணியாற்றியிருந்தார். 1987-89 ஜே.வி.பி ஆயுதக்கிளர்ச்சியை அடுத்து, 1989 ஆம் ஆண்டு அவர் ஜப்பானுக்கு தப்பி சென்றிருந்தார். 1994 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க ஆட்சிக்கு வந்த பின்னர், ஏனைய ஜே.வி.பி. தலைவர்களுடன் அவரும் நாடு திரும்பினார். அதன் பிறகு பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் பொது ஊழியர் தொழிற்சங் கத்தின் ஜே.வி.பி தொழிற்சங்க பிரதிநிதியாக, தலைவராக செயற்பட்டு வந்தார். பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர்தலைமையிலான தொழிற்சங்கம் ஆட்சிலிருந்த அரசாங்கங்களுக்கு கடுமையான நெருக்கடிகளைக் கொடுத்தது.

இந்நிலையில் பியகம உள்ளூராட்சி சபை உறுப்பினராக 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையும், மேல் மாகாண சபையின் உறுப்பினராக 2004 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில், இரண்டு முறையும் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளிளிலும் அசோக சபுமல் ரன்வல அங்கம் வகித்திருந்தார். மேல் மாகாண சபை உறுப்பினராக இருந்தபோது, சபுகஸ்கந்தை பொலிஸ் குற்றப் பொறுப்பதிகாரியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் 2018 ஜனவரியில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். கடந்த ஆட்சிக்காலத்தில் அசோகா ரன்வல தலைவராக இருந்த பெற்றோலிய கூட்டுத்தாபன பொதுத் தொழிலாளர் தொழிற்சங்கம் அரசுக்கு கடும் நெருக்கடிகளைக்கொடுத்த நிலையில் அப்போது மின்சக்தி, எரிசக்தி அமைச்சராகவிருந்த காஞ்சன விஜேசேகர வினால் பதிவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே கடந்த பாராளுமன்றத்தேர்தலில் தேசியமக்கள் சக்தியின் வேட்பாளராக கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று இலங்கையின் பாராளுமன்றத்தின் சபாநாயகராக பதவியேற்றுக்கொண்டார்.

## ஏன் சர்ச்சையில் சிக்கினார்?

பெற்றோலிய தொழிற்சங்கத்தின் தலைவராக இருந்தபோதும் பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டபோதும் தனது பெயருக்கு முன்பாக "கலாநிதி" என்ற பட்டப்பெயரை அசோகா சபுமல் ரன்வல பயன்படுத்தி வந்தார். தேர்தல் வேட்பாளர் விபரங்களிலும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பையும் ஜப்பானின் நூற்றாண்டு பழைமைவாய்ந்த வசீடா பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டபடிப்பையும் முடித்திருந்ததாக அசோகா ரன்வல குறிப்பிட்டிருந்தார். அத்துடன் சபாநாயகராக பதவியேற்றத்துடன் பாராளுமன்ற உத்தியோங்க் பூர்வ இனையதளத்திலும் அவரின் பெயருக்கு முன்பாக "கலாநிதி" என்ற பட்டபெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

அசோக சபுமல் ரன்வல சபாநாயகராக பதவியேற்ற நவம்பர் 21 ஆம் திகதியன்றே சர்ச்சையில் சிக்கினார். சபாநாயகருக்குரிய தலை அங்கியை தவறான முறையில் அணிந்து ஊடகங்களிலும் சமூகவலைத்தளங்களிலும் கேலி, கிண்டலுக்கு ஆளானதுடன் தலை அங்கியையே அணியத் தெரியாத சபாநாயகர் என விமர்சிக்கப்பட்டார். அத்துடன் அவர் தலை அங்கியை தவறாக அணிந்தபோது பாராளுமன்ற செயலாளரோ பிரதி, உதவி செயலாளர்களோ அல்லது தேசிய மக்கள் சக்தியினரோ அதனை ஏன் ஒழுங்குபடுத்த முயற்சிக்கவில்லை என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டன.

இவ்வாறான நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தனது உத்தியோகபூர்வ முகப்பு புத்தகத்தில் "சபாநாயகர் அவரது கலாநிதி பட்டத்தை உறுதிப்படுத்த வேண்டும் அல்லது பதவி விலக வேண்டும்" என்று பதிவேற்றம் செய்து சபாநாயகரின் "கலாநிதி"பட்டம் தொடர்பான கலகத்தை தொடக்கி வைத்தார். மஹிந்த தேசப்பிரியவின் சகோதரர்தான் சுனந்த தேசப்பிரிய. 1971 ஜே.வி.பி.கிளர்ச்சியின் போது அதன் அரசியல் குழு உறுப்பினராக இருந்தவர். அதனால் மஹிந்த தேசப்பிரிய ஜே.வி.பி.யின் அடிமுதல் நுனி வரை நன்கு அறிந்தவர் என்பதனால் அவரின் கருத்து வலுப்பெற்றதுடன் சபாநாயகர் மீதான கடும் விமர்சனங்களும் அதிகரித்தன.

## 22 நாள் சபாநாயகர்

ஆனால் மஹிந்த தேசப்பிரியவின் கருத்துக்கு தான் பதிலளிக்க வேண்டிய தேவையில்லை என அசோக சபுமல் ரன்வல முதலில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் பாராளுமன்ற இணையத் தளத்திலிருந்து "கலாநிதி"ப் பட்டம் நீக்கப்பட்டதையடுத்து அமைச்சரவை பேச்சாளரான நளிந்த ஜயதிஸ்ஸ "கலாநிதி"சர்ச்சை தொடர்பில் சபாநாயகர் விளக்கமளிப்பார் என்று கூறினார். ஆனால் சபாநாயகரோ அவர் பிரதிநித்துவப்படுத்தும் தேசிய மக்கள் சக்தியோ எந்தவிளக்கத்தையும் வழங்காத நிலையில் தேசியமாக்கல் சக்தியின் ஏனைய அமைச்சர்கள், எம்.பி.க்களின் பட்டங்கள் தொடர்பிலும் சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்தன.

அதுமட்டுமன்றி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சபாநாயகர் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகுதி, பேராசிரியர், கலாநிதிப் பட்டங்கள் உள்ளிட்டவற்றை ஆராய தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐக்கிய தேசியக் கட்சியும் புதிய ஜனநாயக முன்னணியும் தீர்மானிததுடன் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் ஜீவன் தொண்டமான் இது தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைப்பார் எனவும் அறிவித்தன.

அத்துடன் தனக்கு கலாநிதி பட்டம் இருப்பதாக கூறி மக்களையும் அரசாங்கத்தையும் ஏமாற்றிய சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்ததுடன் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.சி.அலவத்துவல, அஜித் பீ பெரேரா, சுஜித் சஞ்சய் பெரேரா, சதுர கலப்பதி, ஜகத் விதான மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இவ்வாறு நிலைமை கை மீறிப்போவதை உணர்ந்து கொண்ட தேசிய மக்கள் சக்தி சபாநாயகரை பதவி விலகுமாறு கூறியது தமது அரசாங்கத்தில் எவர் தவறு செய்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்த நிலையிலேயே சபாநாயகர் அசோக்க ரன்வல கடந்த 6 ஆம் திகதி விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு சபாநாயகர் பதவியிலிருந்து இராஜிநாமா செய்வதாக அறிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில், எனது கல்வி தகைமை குறித்து சமூகத்தின் மத்தியில் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. கல்வி தகைமை குறித்து எவ்விதமான பொய்யான தகவல்களையும் நான் வழங்கவில்லை. கல்வி தகைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒருசில ஆவணங்கள் தற்சமயம் என்னிடம் இல்லை. அந்த ஆவணங்களை உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதும் அவற்றை விரைவாக பெற்றுக் கொள்வது கடினமாக உள்ளது. எனக்கு கலாநிதி பட்டத்தை வழங்கிய ஜப்பானின் வஷிடா பல்கலைக்கழகத்துக்கு இணையான ஆராய்ச்சி நிறுவனம் கலாநிதி பட்டத்துக்குரிய ஆவணங்களை வெகுவிரைவில் வழங்குவதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவற்றை வெகுவிரைவில் முன்வைக்க எதிர்பார்த்துள்ளேன். எவ்வாறாயினும் தற்போதுள்ள நிலைமையை கருத்திற் கொண்டு அரசாங்கத்தையும், எம்மீது நம்பிக்கை கொண்ட மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்குவதை தவிர்க்கும் வகையில் சபாநாயகர் பதவியை இராஜிநாமா செய்கிறேன் என்று தெரிவித்திருந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் சபாநாயகராக 22 நாட்கள் மட்டுமே பதவிவகித்த அசோக சபுமல் ரன்வலவின் இராஜிநாமா அநுர அரசின் ஆட்சிக்கு ஏற்பட்ட கரும்புள்ளியாகவே உள்ளநிலையில் ஏனைய அரசுகளின் ஆட்சியில் சபாநாயகர் மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தால் இராஜிநாமா செய்திருப்பாரா? நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவாருங்கள் தோற்கடித்துக் காட்டுகின்றோம் என சவால் விடுத்திருப்பார்கள். ஆனால் அநுரஆட்சியில் இவ்வாறான தவறுகளுக்கு இடமில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிடுவோரும் உள்ளனர்.

## இலங்கை வரலாற்றில் முதல் தடவையா?

இதேவேளை இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் முதல்தடவையாக சபாநாயகர் ஒருவர் இராஜிநாமா செய்துள்ளதாக தவறான தகவல்களும் பரப்பப்படுகின்றன. இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் முதலாவது பாராளுமன்ற காலப்பகுதியான 1978-1988 இல் சபாநாயகராக 7 செப்டெம்பர் 1978 இல் பதவியேற்ற கலாநிதி ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் 6 நாட்கள் மட்டுமே சபாநாயகராக பதவிவகித்த நிலையில் 13 செப்டெம்பர் 1978 இல் அப்பதவியிலிருந்து இராஜிநாமா செய்தார். இதனையடுத்து எம்.ஏ. பாக்கீர் மாக்கர் 21 செப்டெம்பர் 1978இல் சபாநாயகராக பதவியேற்று 30 ஆகஸ்ட் 1983 வரை பதவிவகித்தநிலையில் அப்பதவியிலிருந்து இராஜிநாமா செய்தார். இதனால் அடுத்த சபாநாயகராக ஈ.எல். சேனநாயக்க 6 செப்டெம்பர் 1983 இல் சபாநாயகராக பதவியேற்றுக்கொண்டார். ஆக இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் இராஜிநாமா செய்த சபாநாயகர் வரிசையில் அசோக சபுமல் ரன்வல 3 ஆவது சபாநாயகராகவும் மிகக்குறைந்த நாட்கள் சபாநாயகராக இருந்த வரலாற்றில் 2 ஆவது இடத்திலும் உள்ளார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தேசிய மட்ட நடுவர் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எழுவர் தேர்ச்சி!

இலங்கை கரப்பந்தாட்ட நடுவர் சம்மேளனத்தின் தேசிய மட்ட B தர பரீட்சையில் வட மாகாணத்தைச் சேர்ந்த 7 பேர் (National Volleyball Referee) தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வசந்தகுமார், திரு. நிருஜன், திரு. விமோசன் திரு. வாகீசன், திரு. ஜெகப்பிரதாபன், மன்னார் மாவட்டதைச் சேர்ந்த திரு. நஷ்ரின், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நிலக்சன் ஆகியோர் சித்தி பெற்றுள்ளனர். இந்த எழுவருக்கும் கனடா உதயன் ஆசிரிய பீடம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

# முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைக்க இலங்கை நாடாளுமன்றத்தில் அனுமதி கோரப்பட்டது



தமிழ் மக்களுக்கு எதிரான வரலாற்றின் மிகப்பெரிய இனப்படுகொலையில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரும் முகமாக முள்ளிவாய்க்கால் மண்ணில் அங்கீகரிக்கப்பட்ட நினைவுத் தூபியை நிர்மாணிப்பதற்கு தமிழ் மக்களின் பிரதநிதி ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் அனுமதி கோரியுள்ளார்.

இவ்வாறான அங்கீகரிக்கப்பட்ட நினைவுச்சின்னம் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களால் கோரப்படுவதாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் 17ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று (டிசம்பர் 17) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

"உறவுகளை இழந்து தற்போது வாழ்ந்து வரும் மக்கள் தமது உறவுகளை நினைவு கூறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை என்பதை அங்குள்ள மக்கள் ஆதங்கத்துடன் கூறி வருகின்றனர். உயிரிழந்தவர்களை நினைவுகூறும் விதத்தில் உலகின் மூத்த குடிகளில் ஒன்றான தமிழ் இனம் உயர் நாகரீக பண்பாடுகளை கொண்டுள்ளது. எமது இன வரலாற்றில் மிக அதிகமான மக்கள் உயிரிழந்த எம் உறவுகளை நினைவுகூற ஒரு நினைவாலயம் ஒன்றை அமைப்பது அவசியமான ஒரு விடயம்."

இவ்வாறான நினைவுச் சின்னம் அமைப்பதில் உயிரிழந்தவர்களின் பெயர்களை பதிவு செய்வதன் முக்கியத்துவம் குறித்து துரைராசா ரவிகரன் இதன்போது தெளிவுபடுத்தினார்.



# முள்ளிவாய்க்காலில் மியன்மார் அகதிகளுடன் கரையொதுங்கிய படகு் களத்தில் ரவிகரன் எம்.பி



முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் மியன்மார் நாட்டுப்படகொன்று கரையொதுங்கியுள்ளது. அப்படகில் 102மியன்மார் நாட்டு பிரஜைகள் உள்ளதாகவும், இதில் 35பேரளவில் சிறுவர்களெனவும், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் முதியவர்களும் அதில் உள்ளடங்குவதாகவும் சொல்லப்படுகின்றது.

இந் நிலையில் குறித்த இடத்திற்கு விரைந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த கப்பலில் இருக்கும் அகதிகளுக்கு அப்பகுதி மீனவசங்கத்தினருடன் இணைந்து படகில் சென்று பார்வையிட்டிருந்தார். இதன்போது உலர் உணவுப்பொருட்களும் வழங்கப்பெற்றன.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், கடற்படையினர் ஆகியோரும் கரையொதுங்கிய அகதிகளின் நிலமைகள் தொடர்பில் பார்வையிட்டனர்.

இவர்களை திருகோணமலையில் இருந்து கடற்படை படகு ஒன்று வருகைதந்து அங்கு மீட்டுச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.






- எஸ்.ஆர்.லெம்பேட் (17-12-2024)

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவும், கண்காட்சியும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும், கண்காட்சியும் 17-12-2024 அன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிழக்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மற்றும் திணைக்கள தலைவர்கள்,பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்று செவ்வாய்க்கிழமை (17) காலை 8.30 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தில் இருந்து பண்பாட்டு ஊர்திகள், கலை ஆற்றுகைகள் பண்பாட்டு பவனியாக விழா மண்டபமான மன்னார் நகர சபை மண்டபம் நோக்கி வருகை தந்தது.

அதனைத் தொடர்ந்து வருகை தந்த விருந்தினர்களினால் பாரம்பரிய பொருட்கள் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு, பார்வையிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டு பெருவிழா நிகழ்வு கலைத் தவசி கலைஞர் (குழந்தை) செ.செபமாலை அரங்கில் தமிழ்த்தாய்க்கு வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.



அதனைத்தொடர்ந்து தமிழ் தாய் வாழ்த்து, மங்கள இசை, வரவேற்பு நடனம், நடன நிகழ்வு, இசை நிகழ்வு, கண்டிய நடனம், நபான் நடனம், உழவர் நடனம், வாழ் நடனம் ஆகியவை இடம் பெற்றது. அதனை தொடர்ந்து வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழாவையொட்டி வடந்தை-2024 எனும் நூல் வைபவ ரீதியாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலைக்குரிசில் விருது வழங்குதல், 2023 ஆம் ஆண்டிற்கான வடக்கு மாகாண சிறந்த நூலுக்கான பரிசு வழங்குதல் மற்றும் இளங்கலைஞர் விருது வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் வடமாகாணத்தில் உள்ள இனைத்து மாவட்டங்களையும் பிரதி பலிக்கும் வகையில் நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# அரச அலுவலர்கள் சிலரிடம் மக்களை பழிவாங்கும் சிந்தனை பரவியிருக்கின்றது என்கிறார் வடக்கு ஆளுநர் வேதநாயகன் அவர்கள்!

அரச அலுவலர்களிடம் அதுவும் புதிதாக பதவியேற்ற நிர்வாக அலுவலர்கள் சிலரிடம் மக்களை பழிவாங்கும் - அலைக்கழிக்கும் சிந்தனை இருப்பதை நான் அவதானிக்கின்றேன். இந்த எண்ணங்களை மாற்றுங்கள்.

போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களை, எங்கள் மாகாணத்தை நாங்கள் எல்லோரும் இணைந்துதான் உயர்த்தவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் "வடந்தை" நூல் வெளியீடும் மன்னார் நகர சபை மண்டபத்தில் 17-12-2024 அன்று காலை (17.12.2024) இடம்பெற்றது. மன்னார் பாலத்திலிருந்து அதிதிகள் கலை ஆற்றுகைகளுடன் பேரணியாக விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பாரம்பரிய பொருட்கள் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.




இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில், தமிழர்களின் மிக முக்கியமான பண்பாடு விருந்தோம்பல். அதை நாம் இன்று மறந்து செல்கின்றோம். அவ்வாறு நாங்கள் மறந்து செல்பவற்றை நினைவூட்டத்தான் இவ்வாறான விழாக்கள் நடத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தப் பண்பாட்டு பெருவிழாவுடன் இணைந்ததாக நடத்தப்பட்ட கண்காட்சியை வெகுவாகப் பாராட்டிய ஆளுநர், அந்த ஆக்கங்களை இளையோரே செய்திருப்பதாகவும் அவர்களுக்கு சிறப்பான எதிர்காலம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எமது சுற்றாடலை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் சிறுவயதிலிருந்தே பழக்கவேண்டியிருப்பதாகவும் அதற்காக ஒரு பாடவேளையை ஒதுக்குவது தொடர்பில் அமைச்சின் செயலருடன் கலந்துரையாடவிருப்பதாகவும் குறிப்பிட்ட ஆளுநர், வீதிகளில் குப்பைகளை வீசி எமது மாகாணத்தை அசிங்கமாக்குவதில் அநேகர் படித்தவர்கள்தான் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், மாவட்டச் செயலராக கடந்த காலத்தில் தான் இருந்தபோது கூட இவ்வாறு பொதுமக்கள் சந்திப்பதற்கு வரவில்லை என்றும் சின்ன விடயங்களுக்கும் இப்போது ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். அந்தப் பொதுமக்கள் தங்களது பிரதேசங்களிலுள்ள அரச திணைக்களங்களில் அந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று வருவதாகச் சுட்டிக்காட்டிய ஆளுநர், பொதுமக்கள் தினமான நேற்று திங்கட்கிழமை (16.12.2024) இரவு 8 மணியைத் தாண்டியும் பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொடுத்திருந்தேன் எனவும் தெரிவித்தார்.

முன்னைய காலத்தில் குறைந்தளவு பணியாளர்களுடன் மக்களுக்கு திறம்பட சேவைகள் வழங்கப்பட்டதாகவும் இப்போது அதிகரித்த ஆளணி மற்றும் கணினி வளங்கள் இருந்தாலும் மக்களுக்கு சிறப்பான சேவைகள் வழங்கப்படவில்லை என்று ஆளுநர் வருத்தத்தை வெளியிட்டார்.

மக்கள் தமது பிரதேச அல்லது கீழ்நிலை அலுவலர்களின் ஊடாக ஒரு சேவையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என மேல்நிலை அலுவலர்கள் அல்லது திணைக்களத் தலைவர்களிடம் சென்றால், அந்த மக்களுடன் எரிந்து விழுந்து அவ்வாறு ஏன் சென்றீர்கள் எனக் கேட்டு, அந்தச் தேவையை நிறைவேற்றிக்கொடுக்க மறுக்கின்ற கீழ்நிலை அலுவலர்கள் இப்போது இருக்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், இவர்களால் எப்படி இப்படிச் சொல்ல முடிகின்றது என்ற கேள்வியை எழுப்பியதுடன் இவர்களின் மனநிலையை நினைத்து கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக்டிறஞ்சன், மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், நாட்டுக்கூத்து கலைஞர் கலாபூஷணம் செ.மாசிலாமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இளங்கலைஞர் விருதை 10 பேரும், கலைக்குரிசில் விருதை 13 பேரும், சிறந்த நூல்களுக்கான விருதை 14 பேரும் பெற்றுக்கொண்டனர்.

கனடிய செய்திகள்
Canadian News

## Broker of Record Mr. Sugan Sivarjah and his Team, presented Royal Lepage Ignite Realty Inc's Sales Achievement Awards Ceremony on 14-12-2024, Saturday

# Royal Lepage Ignite Realty Inc' வீடு விற்பனை நிறுவனத்தின் அதிபர் சுகன் சிவராஜா அவர்கள் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா



கனடாவில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கிவரும் வீடு விற்பனை முகவர் நிறுவனங்களில் அதிகம் பேசப்படும் நிறுவனங்களில் ஒன்றாகக் கருதப்படும் Royal Lepage Ignite Realty Inc வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் அதிபர் சுகன் சிவராஜா அவர்கள் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா கடந்த 14-12-2024 சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ பிரைடரன் கொன்வென்சன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் துணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள் கலந்து கொண்டார்கள். பல வீடு விற்பனை முகவர்களும் ஏனைய துறைசார்ந்தவர்களும் அங்கு கலந்து கொண்டு விழாவிற்கு மெருகூட்டினார்கள்.







விற்பனை விருதுகள் வழங்கும் விழாவில் அதி உயர் விற்பனை விருதினைப் பெற்றவரும் ஏனைய உயர் விருதுகளைப் பெற்றவர்கள் சிறப்பு கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர். சிறந்த Listing Award விருதினை சிவராஜா சகோதரர்கள் இணைந்து பெற்றுக்கொண்டனர்.




இதைப் போன்று அடுத்த தரத்திற்கு ஏற்ப வி ற்பனை விருதுகள் பலருக்கு வழங்கப்பெற்றன.

அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோரை சுகன் சிவராஜா மற்றும் அவரது சகோதரர்கள் ஆகியோர் தமது குடும்பத்தினருடன் இணைந்து வரவேற்று உபசரித்தார்கள்.

அழகிய முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழாவை சிறப்பானதாக்க பலரும் உழைத்த அதேவேளை அனைத்து வீடு விற்பனை முகவர்களும் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார்கள்.

**Photo Credit: MR. RAVI ATCHUTHAN**
**Ganeshannthan - Local Journalism Initiative Reporter**

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவின் ஸ்கார்பரோ பகுதிகளில் இடம்பெறும் வாகனத் திருட்டு குறித்து மாகாண அமைச்சர் விஜேய் தணிகாசலம் ஏற்பாடு செய்த சமூகப் பாதுகாப்பு பொதுக் கூட்டம்

கடந்த 17-12-2024 அன்று செவ்வாய்க்கிழமையன்று, ஸ்கார்பரோ - ரூஜ் பார்க்கின் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான விஜய் தணிகாசலம் தலைமையில் வாகனத் திருட்டு மற்றும் பொதுப் பாதுகாப்பில் கவனம் செலுத்தி ஸ்காபரோவின் முதல் சமூகப் பாதுகாப்பு பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வானது, இணை அமைச்சர் மெக்ரிகர் மற்றும் ரொறன்ரோ பொலிஸ் சேவையின் 42 பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளை ஒன்றிணைத்து, குடியிருப்பாளர்கள் தங்கள் சமூகத்தில் நடக்கும் குற்றங்களை நிவர்த்தி செய்யும் பிரதிநிதிகளிடம் தங்கள் கவலைகளை நேரடியாகக் கூற ஒரு வாய்ப்பை வழங்கியது.

இந்த குற்றங்கள் மிக நீண்ட காலமாக ஸ்கார்பரோவை பாதித்துள்ளன. "ஒன்ராறியோ அரசங்கமும் எங்கள் சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு தேவையான கருவிகளை வாங்க மில்லியன் கணக்கான டொலர்களை முதலீடு செய்துள்ளனர். எமது எல்லைப் பாதுகாப்பு சேவைகளை மேம்படுத்துவதும், பிணை முறையை சீர்திருத்துவதும் மத்திய அரசின் கடமையாகும். முதல்வர் டக் போர்ட்டும் எமது ஒன்ராறியோ மாகாண அரசும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொள்வது ஒரே விடயம் தான். இது போன்ற வன்முறைக் குற்றங்களை யாராவது செய்தால், அவர்கள் நீதியின் கதவு வழியாக விடுவிக்கப்படாமல், பூட்டி வைக்கப்பட வேண்டும்" என அவர் வலியுறுத்தினார்.

குடியிருப்பாளர்களால் எழுப்பப்பட்ட முக்கிய கவலைகளில் வன்முறைக் கடைக் கொள்ளைகளைக் கண்ட குடும்பங்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, துப்பாக்கி முனையில் வாகனங்கள் திருடப்படுவது மற்றும் கனடாவின் பலவீனமான பிணைச் சட்டங்கள், மீண்டும் மீண்டும் குற்றவாளிகளை வீதிகளில் திரும்ப அனுமதித்தல் போன்றன குறிப்பிடப்பட்டன.



விஜய் தணிகாசலம் அவர்கள், கடுமையான பிணைமீட்புச் சட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தினார், "மீண்டும் மீண்டும் குற்றவாளிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு, அடுத்த நாள் அதே குற்றங்களைச் செய்கிறார்கள். இது நிறுத்தப்பட வேண்டும். அதற்கு மத்திய அரசு பிணை சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். அனைவருக்கும் பாதுகாப்பான ஸ்கார்பரோவை உருவாக்க, குடியிருப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகளிற்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான முக்கியமான படியை இந்த நிகழ்வு அமைந்திருந்தது.







கனடா உதயன் பத்திரிகை மற்றும் யுகம் வானொலி நிறுவனம் மற்றும் கிருஸ்ணா ரெலிகாஸ்ட் சேவை ஆகிய ஊடகங்கள் அங்கு தமிழர் சமூகம் சார்ந்தவையாக பங்குபற்றின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**Arjune - Local Journalism Initiative Reporter**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1125

## ஆலடி விநாயகஉ ஆலயம் திருகோணமலை

“ திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
குாதலாற் கூப்புவர் தம் கை.”

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க, இக்கருத்தின் அடிப்படையில் வாழ்வது மானிட தர்மமாகும். ஆயினும் ஒவ்வொருவரும் தமது எண்ணம், வாழ்வுமுறை, சமுதாய அமைப்பு, பூகோள அமைப்பு, இவற்றிற்கிணங்க தமக்கேற்றமுறையில், அறிவுசார்ந்த சிந்தனையுடன் அந்தந்தச் சமுதாயத்தின் ஆன்றோர் காட்டிய வழியில் இறைவழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் சமுதாய வளர்ச்சிப்பின்னணியோடு மெஞ்ஞான விஞ்ஞான நோக்கங்களைக் கருத்தில் கொண்டு மக்களை நெறிப்படுத்தும் நோக்கில், கோவில்களும் அங்கு எழுந்தருளும் திருவுருவங்களும் அமைக்கப்பட்டு வழிபாடியற்றப்படுகின்றது.

இவ்வாறான கோவில்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. தற்கால சூழ்நிலையில் நாடுகளிலும், இனங்களிலும், சமூகங்களிலும் நிகழும் நிகழ்வுகள் ஆழ்மனதில் பலமான தாக்கத்தை ஏற்படுத்தி மன அமைதியையும், தேக ஆரோக்கியத்தையும் அழிப்பதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரையும் சுற்றி நிகழும் எதிர்மறையான சம்பவங்கள் எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்களைப் பெரிதும் பாதிக்கின்றன. இவ்வாறான பாதிப்புக்களை நீக்கி மன அமைதியைக் கொடுக்க வல்லவையாகக் கோவில்கள் விளங்குகின்றன.

திருக்கோவில்களின் அமைப்பை நோக்கின், எங்கும்நிறைந்த எல்லாம்வல்ல பரம்பொருளின் இறைஅருளை, இந்தப் பிரபஞ்சத்திலிருந்து ஈர்த்தும், சேகரித்தும் அதனை கோவிலுக்கு வரும் பக்தர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பெருவல்லமைபடைத்தவையாக உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கேற்றவகையிலேயே பல சூட்சுமமான நெறிகளையும், சாத்திரவிதிகளையும் கடைப்பிடித்து கோவில்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இவ்வாறான கோவில்களுக்குச் சென்று வரும்பொழுது ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் எதிர்மறையான எண்ணங்கள் ஆழ்மனதில் வேரூன்றாது தடுக்கப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே ஆன்றோர்கள் “கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்”, “ஆலயம்தொழுவது சாலவும் நன்று” என்ற மூதுரைகளை மக்களுக்கு அறிவித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறான நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு ஒருவனாகிய இறைவனுக்குப் பல்வேறு வடிவங்களைக்கொடுத்து அமைக்கப்பட்ட திருக்கோவில்கள் உலகமெங்கும் காணப்படுகின்றன. ஈழத்திலும் ஆயிரக்கணக்கான கோவில்கள் அமைந்து அருள்பாலித்து வருகின்றன. இவ்வாறான கோவில்களுள் சாதி, மதபேதமின்றி அனைவரும் தொட்டு வணங்கும் திருவடிவமாக விநாயகர் வடிவம் காணப்படுகின்றது.

அரசமரத்தடியிலும், குளத்தங்கரையிலும், வயல்வெளிகளின் மத்தியிலும் சிறு குடிசைகளிலும் எழுந்தருளச் செய்து வழிபடும் வணக்கமாக விநாயக வணக்கமுறை காணப்படுகின்றது. இவ்வாறு இலகுவாக வழிபடும்முறையில் அமைந்த தெய்வமாக விநாயகர் காணப்படுவதோடு, முதல் வணக்கத்தினை விநாயகருக்கு அளித்தே ஏனையதெய்வங்களை வழிபடும் வணக்கமும் தொன்றுதொட்டு மரபாக விளங்குகின்றது. எக்காரியத்தைத் தொடங்கினும் அவை விக்னமின்றி நிறைவேற விநாயகரை வழிபட்டே ஆரம்பிக்கவேண்டும் என்ற மரபும் தமிழர்களுடைய சம்பிரதாயங்களிலே காணப்படுகின்றது. அறிவின் மூலமாக ஓம் என்ற பிரணவத்தின் வடிவமாக பிள்ளையார் விளங்குவதும் ஆழ்ந்த கருத்தையும் அறிவின் முதிர்ச்சியையும் காட்டுவதாக அமைகின்றது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைப்பிரதேசத்தின் மத்தியில் மக்கள் குடியிருப்பு நிறைந்து காணப்படுகின்ற பகுதியில் அமைந்திருக்கும் ஆலடி விநாயகர் ஆலயம், மக்களால் பெரிதும் போற்றப்படும் ஆலயமாகக் காணப்படுகின்றது. இந்த ஆலயம் திருகோணமலையில் பிரசித்திபெற்ற சக்திதலமாக விளங்குகின்ற பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு அருகே அதன் ஈசானதிக்கில் அமைந்திருப்பது, இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகக் காணப்படுகின்றது. ஆலடி விநாயகர் ஆலயத்தின் ஈசான திக்கில் பஞ்சஈஸ்வரங்களுள் ஒன்றாக விளங்கும் சரித்திரப்பிரசித்திபெற்ற திருக்கோணேசர் ஆலயம் காட்சியளிக்கின்றது. ஆலடிவிநாயகர் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அங்கிருந்தபடியே திரும்பிநின்று கோணேசப்பெருமானை வணங்கி வழிபாடு செய்வது வழமையான நிகழ்வாகக் காணப்படுகின்றது.

திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலயத்தின் ஆரம்பம் சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகக் கருதமுடியும். ஆலயத்தின் வடக்குத்திசையில் ஏறக்குறைய 200 யார் தூரத்தில் ஐயனார்கேணி என்றபகுதி காணப்படுகின்றது. வெறும்நிலப்பரப்பாகக் காணப்பட்ட இப்பகுதி பின்னாளில் மக்கள் குடியிருப்புப் பிரதேசமாக மாறிவிட்டது. இதன்பின்னர் இங்கு அமைந்துள்ள வீதியை ஐயனார்கேணிவீதி என அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. முற்காலத்தில் ஐயனார்கேணிப்பகுதி, வியாபாரம், மற்றும் யாத்திரை செய்வோர் தங்கிச் செல்லும் முக்கிய இடமாகக் காணப்பட்டுள்ளது.

வளரும்...

கனடிய செய்திகள் Canadian News

## Broker of Record Mr. Selva Vettyvel and his Team, presented HomeLife Future Realty Inc's Sales Achievement Awards Ceremonny on 15-12-2024, Sunday

# HomeLife Future Realty Inc வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் அதிபர் செல்வா வெற்றிவேல் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா







கனடாவில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கிவரும் வீடு விற்பனை முகவர் நிறுவனங்களில் முக்கியமானதொன்றாகக் கருதப்படும் HomeLife Future Realty Inc' வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் அதிபர் செல்வா வெற்றிவேல் அவர்கள் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா கடந்த 15-12-2024 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ பிரைடரன் கொன்வென்சன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கலந்து கொண்டார். நூற்றுக்கணக்கான வீடு விற்பனை முகவர்களும் ஏனைய துறைசார்ந்தவர்களும் அங்கு கலந்து கொண்டு விழாவிற்கு மெருகூட்டினார்கள்.








விற்பனை விருதுகள் வழங்கும் விழாவில் அதி உயர் விற்பனை விருதினை வழமை போல திரு. அமலன் - திருமதி. அபி அமலன் தம்பதி பெற்றுக்கொண்டனர்.

இதைப் போன்று அடுத்த தரத்திற்கு ஏற்ப விற்பனை விருதுகள் பலருக்கு வழங்கப்பெற்றன.

அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோரையும் திரு செல்வா வெற்றிவேல் தனது குடும்பத்தினருடன் இணைந்து வரவேற்று உபசரித்தார்.

அழகிய முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழாவை சிறப்பானதாக்க பலரும் உழைத்த அதேவேளை அனைத்து வீடு விற்பனை முகவர்களும் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார்கள்.

**Photo Credit: MR. RAVI ATCHUTHAN**
**Arjune - Local Journalism Initiative Reporter**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

# இவ்வார ராசிபலன்


## 20-12-2024 வெள்ளி தொடக்கம் 26-12-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** மங்கையர் சிலருக்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். பணியில் கவனம் தேவை. கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப்பலம் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. சுபக்காரியம் கைக்கூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். வறுமைகள் அகலும். வெளியூர் பயணம் உண்டு. தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நண்பர்களால் நன்மையுண்டு. விரக்திகள் மறையும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். முத்தான வாய்ப்பு பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கல்வியில் கவனம் தேவை. கடன் வசூலாகும். புத்தி சாதுர்யம் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,6,5
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**ரிஷபம்:** மனக்கவலைகள் விலகும் வாரம். பாதகமான சூழ்நிலைகள் அகலும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் சீராகும். சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பதவி உயர்வு கிட்டும். வேண்டாத விஷயங்கள் விலகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழில் அபிவிருத்தி அடையும். வாயில் தேடி வரன் வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நலத்தில் அக்கறை தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். திருப்தி பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். பெண்களின் ஆலோசனை பயன் தரும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பயன் தரும். வருமானம் திருப்தி தரும். காதலர்கள் தம்பதியாவார்கள். தொலைதூரப் பயணம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 5,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z




**மிதுனம்:** கண்ணியமும், புண்ணியமும் சேரும் வாரம். மனோ பயம் அகலும். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் உண்டாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். வஸ்திர தானம் செய்வதால் வளங்கள் சேரும். தகுதிகள் மிகுதியாகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டாகும். வீண் வம்புகள் ஒழியும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். பயணம் வெற்றி தரும். ஆபரணச்சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். வாழ்வில் வசந்தம் கூடும். கனவுகள் பலிதமாகும். குடும்ப கௌரவம் உயரும். பேச்சில் நிதானம் தேவை. வளமான சிந்தனை உதயமாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கையுண்டு. பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். குடும்பத்தில் பல வகைகளில் நன்மை ஏற்படும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெருமிதம் நிறைந்த காலம். இடையூறுகள் அகலும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**கடகம்:** சினத்தைத் தவிர்க்க வேண்டிய வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். போட்டி, பொறாமைகள் விலகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். வயிற்று சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மகிழ்ச்சியான செய்தி வரும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உற்சாகம் களைகட்டும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். சகோதர உதவி கிட்டும். இலக்கிய ஆர்வம் கூடும். முயற்சிகள் வெற்றி தரும். தாய், தந்தை உதவி உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலை அமையும். திருமகள் கிருபை உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். வழக்குகள் முடிவுக்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். நலம் காணும் வாரம். திடீர் திருப்பம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Q




**சிம்மம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். ஆடை அணிகலன் சேரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. உடல்நிலையில் கவனம் தேவை. எண்ணங்கள் மாறுபடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். விருப்பமான தொழில் அமையும். கடன் சுமை குறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கன்னிப்பெண்களிடம் செயல்களில் துணிவு கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். குடும்ப கௌரவம் உயரும். ஆலோசனை பலன் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மை தரும். விருந்தினர் வருகை உற்சாகம் தரும். வீடு தேடி வெற்றி வரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். துணிவோடு செயல்படுவீர்கள். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். பிரச்சனை முடிவுக்கு வரும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். மெத்தனப் போக்கு விலகும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,S




**கன்னி:** பெண்களால் ஆதாயம் வரும் வாரம். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகமான சூழ்நிலை விலகும். கல்வியில் ஆர்வம் கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மை உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பாராட்டுக்கள் குவியும். வெளியூர் பயணம் வெற்றி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்புக் கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு குறையும். ஆபரணச் செலவுகள் கூடும். யோகமான காலமாக அமையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் மேன்மை உண்டு. காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். வாயில் தேடி வாய்ப்பு வரும். காரியங்கள் கைகூடும். வங்கிச்சேமிப்பு உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 9,5,3,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J




**துலாம்:** பயணத்தால் அனுகூலம் தரும் வாரம். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்புதும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். தொழில் போட்டி மறையும். உறவினரால் உதவிகள் கிட்டும். ஆபத்துக்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப் பயணம் உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். தர்மச் சிந்தனை மேலோங்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. பழைய பகை தீரும். கடன் அமையும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர் விடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். நினைத்தது நடக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G

*(தொடர்ச்சி 26 பக்கம்)*

# 10ம் ஆண்டு நினைவு அஞ்சலி

திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் கோவிலடியை சேர்ந்தவரும், முன்னாள் கொழும்பு இந்தியன் ஓவசீஸ் வங்கிக் கணக்காளரும், பின்னர் கனடா பிரம்ரன் நகரினை வதிவிடமாகவும் கொண்டிருந்தவருமான அமரர் கனகர் குமாரசாமி அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி.

**பிறப்பு:** 10 - 02 - 1932



**இறப்பு:** 06 - 01 - 2015

ஆண்டு பத்து ஆனதென்ன
ஆறவில்லை எம்மனமே
அன்று பட்ட அவ் வலியோ
இன்றுவரை தொடர்வதென்ன
தேடி வைத்த உறவு இன்றும்
தேம்பி மனம் வாடுகையில்
கூடி ஒரு பொழுதேனும்
குடியிருந்து வாழ்வதற்கு
நாடி உமை வரும்போது
என் குடும்பம் என எமை அணைத்து
கோடி ஒரு புண்ணியமாய்
மீண்டும் அதை எமக்களிப்பீர்

**திதி: 16-12-2024**

## அமரர் கனகர் குமாரசாமி

(முன்னாள் கொழும்பு இந்தியன் ஓவசீஸ் வங்கிக் கணக்காளர்)

இங்ஙனம்,
மனைவி, மக்கள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகளும்



## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** வெற்றிச் செய்தி வரும் வாரம். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். புதுமைகள் நிறைந்த காலம். நீண்ட நாளைய நோய் விலகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். உள்ளம் மகிழும். வெளிவட்டாரப் பழக்கங்கள் அதிகமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மனிதநேயம் மிகுதியாகும். வயிற்று உபாதைகள் வந்து போகும். பெற்றோர்களால் பெருமை சேரும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். தடைகள் விலகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். உழைப்பு கடுமையாக இருக்கும். விரக்திகள் விலகும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகமாகும். காலை நேரத்தில் இனிய செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியம் சேரும். வேதனைகள் சாதனையாகும். பெண்களால் பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,T




**தனுசு:** தந்தை வழி உறவுகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. வியாபாரத்தில் வேகம் கூடும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளியூர் பயணம் வெற்றி தரும். சொத்துக்கள் வில்லங்கம் விலகும். கனிவான பேச்சு அவசியம். மருத்துவச் செலவு குறையும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். நூதன பொருள் சேர்க்கையுண்டு. போட்டி, பொறாமைகள் விலகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். வருமானம் திருப்தி தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிட்டும். வியாபாரம் விருத்தியாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சிந்தனை மேலோங்கும். பாகப்பிரிவினை ஏற்படும். பழைய பாக்கிகளும் வசூலாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,L




**மகரம்:** மகிழ்ச்சி செய்தி வரும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகள் உதிரியாவார்கள். தொட்டக்காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். வெளியூர் பயணம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதார நிலை உயரும். வரவுகள் அதிகரிக்கும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். அயல்நாட்டு பயணம் உண்டு. ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெரியோர்களின் பாராட்டுக் கிடைக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,P




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். எதிரிகள் உதிரியாவார்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். மாற்றங்கள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்பு வரும். மனக்கசப்பு நீங்கும். பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். மங்களச் செய்திகள் வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் பெருகும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். ஆக்கப்பூர்வ எண்ணம் உதயமாகும். தொழிலாளர்களுக்கு மன நிறைவு உண்டு. கடன் பிரச்சனைகள் நீங்கும். புத்தி சாதுர்யம் பெருகும். செய்த்தொழில் லாபம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கட்டிடத் தொழிலாளர்களுக்கு லாபம் அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். உத்தியோகத்தில் நல்லபெயர் கிட்டும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**மீனம்:** பணியில் பாராட்டு கிடைக்கும் வாரம். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் குறையும். மன நிம்மதி குறையும். தன சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். ஆதாயம் பெருகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலைப்பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். செல்வாக்கு உயரும். வரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்யம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். எதிர்ப்புக்கள் தவிடுபொடியாகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பாராட்டுக்கள் கூடும். மாலை நேரத்தில் கவனம் தேவை. அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கைத் தரம் உயரும். பொன், பொருள் சேரும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் தரும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். புதிய சிந்தனை உதயமாகும். சேமிப்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலில் ரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். முயற்சியில் வளர்ச்சியடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நல்லச்செய்திகள் நாடி வரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். செல்வாக்கு உயரும். வீடு தேடி வெற்றி வரும். ஆழமான மேன்மைகள் தொடரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சந்தோஷம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P

# சர்வதேச UCMAS போட்டியில் அதிக சாம்பியன்களை வென்ற யாழ்ப்பாண மாணவர்கள்!




இந்தியாவின் புதுடெல்லியில் 14ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் (14) நடைபெற்ற சர்வதேச UCMAS போட்டியில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற மாணவர்களில் 07 மாணவர்கள் சம்பியன்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

உலக நாடுகளில் இருந்து 1000 மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட போட்டியில் இலங்கையில் பல பாகங்களில் இருந்து 103 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களில் பல்வேறுபட்ட பிரிவுகளை சேர்ந்த 16 மாணவர்கள் சர்வதேச சம்பியன் பட்டத்தை வென்றுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி உநவெசந இருந்து 21 மாணவர்கள் கலந்து கொண்டு மூன்று சம்பியன்களும் யாழ்ப்பாண கிளையில் இருந்து 6 பேர் கலந்து கொண்டு நான்கு மாணவர்கள் சம்பியன் ஆகியுள்ளனர்.

அதேவேளை வெள்ளவத்தை கிளை, திகாரியா கிளை மற்றும் குளியாப்பிட்டியா கிளைகளில் இருந்து சென்றவர்களில் தலா இருவரும் மட்டக்களப்பு கிளை மற்றும் களனி கிளையில் இருந்து சென்றவர்களில் தலா ஒருவரும் சம்பியனாக தெரிவாகியுள்ளனர்.



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

» VACANT LAND » COMMERCIAL » RESIDENTIAL
» INDUSTRIAL » CONSTRUCTION




## OUR SERVICE RESIDENTIAL, COMMERCIAL

- Purchase (Builder Purchase, MLS Purchase, Private Purchase)
- Equity line of Credit
- Refinance
- Renewal



## NESAN Subramaniam

CONTECT US 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்

UTHAYAN உதயன்

விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.

FRUITS HABY

பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்

5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.

416 752 1524



உதயம் 1498 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday December 20, 2024


# RoyalLepage Ignite Realty Inc வீடு விற்பனை நிறுவனம் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா




கனடாவில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கிவரும் வீடு விற்பனை முகவர் நிறுவனங்களில் அதிகம் பேசப்படும் நிறுவனங்களில் ஒன்றாகக் கருதப்படும் **RoyalLepage Ignite Realty Inc** வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் அதிபர் சுகன் சிவராஜா அவர்கள் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா கடந்த 14-12-2024 சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ பிரைட்ரன் கொன்வென்சன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் துணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.
(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# ஸ்கார்பரோ பகுதிகளில் இடம்பெறும் வாகனத் திருட்டு தொடர்பாக அமைச்சர் விஜேய் தணிகாசலம் ஏற்பாட்டில் சமூகப் பாதுகாப்பு பொதுக் கூட்டம்



கடந்த 17-12-2024 அன்று செவ்வாய்க்கிழமையன்று, ஸ்கார்பரோ - ரூஜ் பார்க் மாகாண அரசு உறுப்பினரும் அமைச்சருமான விஜய் தணிகாசலம் தலைமையில் வாகனத் திருட்டு மற்றும் பொதுப் பாதுகாப்பில் கவனம் செலுத்தி ஸ்காபரோவின் முதல் சமூகப் பாதுகாப்பு பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வானது, இணை அமைச்சர் மெக்ரிகர் மற்றும் ரொறன்ரோ பொலிஸ் சேவையின் 42 பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளை ஒன்றிணைத்து, குடியிருப்பாளர்கள் தங்கள் சமூகத்தில் நடக்கும் குற்றங்களை நிவர்த்தி செய்யும் பிரதிநிதிகளிடம் தங்கள் கவலைகளை நேரடியாகக் கூற ஒரு வாய்ப்பை வழங்கியது.
(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# HomeLife Future Realty Inc வீடு விற்பனை முகவர் நிறுவனம் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா



கனடாவில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கிவரும் வீடு விற்பனை முகவர் நிறுவனங்களில் முக்கியமானதொன்றாகக் கருதப்படும் **HomeLife Future Realty Inc** வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் அதிபர் செல்வா வெற்றிவேல் அவர்கள் நடத்திய விற்பனைச் சாதனையாளர் விருது வழங்கும் விழா கடந்த 15-12-2024 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ பிரைடரன் கொன்வென்சன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கலந்து கொண்டார். நூற்றுக்கணக்கான வீடு விற்பனை முகவர்களும் ஏனைய துறைசார்ந்தவர்களும் அங்கு கலந்து கொண்டு விழாவிற்கு மெருகூட்டினார்கள்
(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் சிவஞானம் மொன்றியால் அருள் மிகு திருமுருகன் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தார்

தற்போது கனடாவிற்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ள இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் ஶ்ரீதரன் சிவஞானம் 19-12-2024 அன்று வியாழக்கிழமையன்று மொன்றியால் அருள் மிகு திருமுருகன் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தார்.

இங்கே காணப்படும் படங்களில் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினருக்கு பிரசாதம் வழங்குவதையும் அருகில் ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினர் வாகீசன் நடராஜா அருகில் நிற்பதையும் காணலாம்.

